# முன்னேற்ற அறிக்கை

# நீதி அமைச்சு

## 2014 சனவரி - டிசம்பர்

மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி
கொழும்பு 12

இணையத்தளம்: www.justiceministry.gov.lk

**கௌரவ நீதி அமைச்சர்**

**கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, சனாதிபதி சட்டத்தரணி**

**கௌரவ பிரதி நீதி அமைச்சர் சஜீவ சேனசிங்க**

**நீதி அமைச்சின் செயலாளர் திருமதி. கமலினி த சில்வா**

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**

## பகுதி I


| | | |
|---|---|---|
| 1. | நோக்கு மற்றும் செயற்பணிகள் | 03 |
| 2. | நீதி அமைச்சின் பணிகள் | 04 |
| 3. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் | 05 |
| 4. | அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 07 |
| 5. | நீதி அமைச்சின் செயலாற்றுகை | 08 |
| 5.1 | சட்டப்பிரிவு | 08 |
| 5.2 | நிருவாக மற்றும் தாபனப் பிரிவு | 15 |
| 5.3. | உட்கட்டமைப்புப் பிரிவு | 18 |
| 5.4. | கணக்குகள் பிரிவு | 21 |
| 5.5. | திட்டமிடற் பிரிவு | 21 |
| 5.6. | நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 22 |
| 5.7. | உள்ளக கணக்காய்வு பிரிவு | 23 |
| 6. | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை | 24 |
| 6.1 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 24 |
| 6.2 | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 26 |
| 6.3 | கடன் இணக்க சபை திணைக்களம் | 28 |
| 6.4 | இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு | 30 |
| 6.5 | மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 34 |
| 6.6 | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 35 |
| 7. | நீதிமன்றங்கள் | 37 |
| 7.1 | உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 37 |
| 7.2 | மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 39 |
| 7.3 | தொழில் நியாயசபைகள் அலுவலகம் | 40 |
| 8 | தொடர்புடைய நிறுவனங்கள் | 42 |
| 8.1 | இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 42 |
| 8.2 | இலங்கை சட்டக்கல்லூரி | 44 |


## பகுதி II


| | | |
|---|---|---|
| 9 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 46 |
| 9.1 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 49 |
| 9.2 | சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் | 55 |
| 10 | சட்டமா அதிபர் திணைக்களம் | 60 |
| 11 | சட்ட வரைஞர் திணைக்களம் | 63 |
| 12 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 64 |

# நீதி அமைச்சு

## நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.


## செயற்பணிகள்


- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.

## 02. நீதி அமைச்சின் பணிகள்

- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும்பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான நீதிமன்ற நிருவாக அலுவல்கள்.
- நீதிமன்றங்களின் நிருவாகம்
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- தொழில் நியாயசபைகள் தொடர்பான அலுவல்கள்.
- சட்ட மீள்கூற்றும் கோவைப்படுத்தலும்.
- சட்ட மறுசீரமைப்பு.
- சட்டச் சொற்றொகுதிகளின் தயாரித்தல்.
- காதி நீதிமன்ற முறைமையின் விளைவுப் பெருக்கத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்தலும்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்
- அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களைக் கண்காணித்தலும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பணிகளும்

## 03. நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்




சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்
மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்
நிதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்
தொழில் நியாயசபைகள் அலுவலகம்
இலங்கை நீதிபதிகள் நிறுவனம்
காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்
நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

## 04. அமைச்சினது பிரிவுகளின் பணிகள்

- அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:

i. சட்டப்பிரிவு
ii. நிருவாக / தாபனப்பிரிவு
iii. உட்கட்டமைப்புப்பிரிவு
iv. கணக்குகள் பிரிவு
v. திட்டமிடற்பிரிவு
*vi.* உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

I. **சட்டப்பிரிவு**

நீதி நிர்வாகத்திற்கு ஏற்புடைய சட்டங்களுக்கான கொள்கைகளை தயார் செய்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடல் மற்றும் சட்ட உதவிகளை வழங்கல். குற்றவியல், குடியியல், மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர உதவி மற்றும் சர்வதேச ரீதியில் பிள்ளைகளைக் கடத்தலில் குடியியல் சம்பந்தமான விடயங்கள் போன்றவற்றில் மத்திய அதிகாரியாக இருத்தல். தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை மாறுதலின் கீழ் மறியற்காரர்களை ஒப்படைத்தல், சட்டவாக்கத்தயாரிப்பு பற்றிய அமைச்சரவைத் துணைக் குழு மற்றும் மன்னிப்பு வழங்கப் பரிந்துரைத்தல்.

II. **நிருவாக / தாபனப்பிரிவு**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

III. **உட்கட்டமைப்புப்பிரிவு**

நீதிமன்றங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்கள், தொழில் நியாய சபைகள், மற்றும் அமைச்சின் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றிற்கு பகுதிகளை சேர்த்தலும் மேம்படுத்தலும்.

IV. **கணக்குகள் பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்.

V. **திட்டமிடற்பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் கருத்திட்டங்களை திட்டமிடலும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் சீரமைத்தலும்.

VI. **உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 05.நீதி அமைச்சின் செயலாற்றுகை

## 5.1 சட்டப்பிரிவு

2014 ஒகஸ்ட் 31ம் திகதி வரை சட்டப்பிரிவினால் பின்வரும் சட்டமூலங்களும் சட்டத் திருத்தங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. **சிறுவர் (நீதிமுறை பாதுகாப்பு) சட்டமூலம்**

   இச் சட்டமூலத்தின் மூலம் பிள்ளை பாதுகாப்பு தொடர்பில் தற்காலத்திற்கு ஏற்றவாறு ஏற்பாடுகளைச் செய்வதுடன் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தை நீக்கிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்முலம் நீதிமன்றம் மற்றும் நன்நடத்தை பாதுகாவலு க்கும் இடையே ஒத்துழைப்பை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்டமூலத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. **காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

   இச் சட்டமூலத்தால் காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளால் 1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதிக்குள் அநீதிக்கு உட்பட்ட ஆட்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சட்டமூலமானது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. **காலவிதிப்பு கட்டளைச் சட்டத் திருத்தம் (பகுதி 15)**

   இச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (2014ம் ஆண்டின் 26ம் இலக்க சட்டம்)

4. **ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலம்**

   கணினிக் குற்ற சட்டமூலத்தில் கணினி மூலம் புரியப்படுகின்ற பிள்ளைகள் தொடர்பான ஆபாசமான காட்சிகள் சம்பந்தப்பட்ட பகுதியை நீக்கி இதனை புதிய ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்பில் உள்ளது.

5. **1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் திருத்தம்**

   தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும்பொருட்டு இச்சட்டமூலம் வரையப்பட்டுள்ளது.

6. **இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம்**

   தேசிய மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டத்தால் செய்யப்பட்ட சில விதப்புரைகளை செயற்படுத்தும்பொருட்டு இச்சட்டமூலம் வரையப்பட்டுள்ளது.

7. **குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தும் சட்டமூலம்**

   குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிக்காரர்கள் ஆகிய இரு சாராருக்கும் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இச் சட்டமூலம் செய்கிறது. இச் சட்டமூலமானது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் உயர் நீதிமன்றத்தில் ஆடசேபிக்கப்பட்டது. 2015 இல் பாராளுமன்றத்திற்கு அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**8. நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம்**

மோசடியான காணி கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றதனால் நொத்தாரிசு கட்டளைச்சட்டம் திருத்தஞ் செய்யப்படவுள்ளது. உறுதியில் கையொப்பமிடும்போது உயிரியல் கையொப்பங்களை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூலமானது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவிற்கு ஆற்றுப்படுத்தியது. இவ் உபகுழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. அப் பரிந்துரைகள் இச் சட்ட மூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. இச் சட்டமூலம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**9. முஸ்லிம் விவாக, மணநீக்கச் (திருத்தச்) சட்டமூலம்**

கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் முஸ்லிம் விவாக, மணநீக்க (திருத்தம்) சட்டம் பற்றி கலந்தாலோசனை செய்யப்பட்டு வரைவு தயார் செய்யப்படுகிறது.

**10. சிறைச்சாலைகள் நிருவாக சட்டமூலம்**

இச் சட்டமூலம் சிறைச்சாலை நிருவாகம் தொடர்பில் புதிய நிருவாக முறையொன்றை வழங்குகிறது. இச் சட்டமூலம் சிறைச்சாலைகள் மற்றும் பனர்வாழ்வு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மற்றும் பனர்வாழ்வு அமைச்சுடனான கலந்துரையாடலின் பின்னர் வரைவுச்சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளவேண்டியிருந்தது. அது சம்பந்தமான பரிந்துரைகள் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**11. குடியியல் வழக்கு நடவடிக்கைகளின்போது பெற்றோர் தன்மையைப் பரீட்சித்துப் பார்க்கும் சட்டமூலம்**

இச் சட்டமூலத்தால் தாய்மை அல்லது தந்தையை இனங்காண்பதற்கு டீ.என்.ஏ. பரிசோதனைக்காக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இச்சட்டமூலம் பிள்ளைகளின் பொறுப்பு, பராமரிப்பு, மற்றும் மரபுரிமை போன்ற விடயங்கள் தொடர்பில் மிகவும் உதவிகளை வழங்குகிறது. இச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையால் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**12. நீதித்துறைச் (திருத்தச்) சட்டம் (மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்புச் செய்தல்)**

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 92 ஆக உயர்த்துமாறு கிடைக்கப்பெற்ற கோரிக்கையைத் தொடர்ந்து மேலே கூறப்பட்ட வரைவுச் சட்டமூலத்துடன் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று இணைக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையால் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது

**13. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் (சட்டமுறை மத்தியஸ்தம்) மற்றும் முன் விசாரணை (நடவடிக்கைகள்) சட்டமூலம்**

சட்டவாக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவினால் இச் சட்டமூலம் பரிசீலிக்கப்பது. உபகுழுவின் பரிந்துரைகன் இச் சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்டு சட்டத்தரணிகள் சங்கத்திற்கு அவர்களின் அவதானிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**14. வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை பரஸ்பரம் அமுல்படுத்தல்**

சட்ட ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட வரைவுச் சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

**15. நீதிமன்ற அவமதிப்பு சட்டமூலம்**

இச்சட்டமூலம் பரிசீலிக்கப்படுகிறது.

**16. அற்றோனித் தத்துவ (திருத்தச்) சட்டமூலம்**

மோசடியைத் தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்படுகிறது. வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூரம் தற்போது சட்டவரைஞரிடம் உள்ளது.

**17 குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான (திருத்தச்) சட்டமூலம்**

குறிப்பிட்ட குற்றங்களை அட்டவணையில் சேர்ப்பதற்காக வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது

**18. குற்றவியல் நடைமுறை (திருத்தச்) சட்டமூலம்**

நீதிமன்ற சாட்சிப்பொருட்களை அகற்றுவதற்காக வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**19. நாடோடிகள் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்ளைச் செய்தல்**

வரைவு தயாரிக்கப்பட்டுள்துடன் அதைப்பற்றி கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது.

**ஏனைய பணிகள்**

- **2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்வதேச பிள்ளை ஆட்கடத்தல் சட்டம்**

2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பிள்ளை ஆட்கடத்தல் தொடர்பாக 52 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் பெருமளவிலான விண்ணப்பங்கள் வழக்குத்தொடுத்தலின்றி முடித்துக் கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இச் சட்டத்தின்கீழ் மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. ஐக்கிய இராட்சியத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இரு பிள்ளைகள் மத்தியஸ்த்தின் பின் திருப்பி அனுப்பப்பட்டனர். அயர்லாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு பிள்ளை நீதிமன்ற உத்தரவின் பேரில் திருப்பி அனுப்பப்பட்டது.

- **தவறாளர்களை ஒப்படைத்தல்**

இலங்கையினுள் தவறொன்றைப் புரிந்து தவறாளராகிய வேறொரு நாட்டின் பிரசையொருவரை அந்நாட்டிற்கு ஒப்படைத்தல் மற்றும் வேறொரு நாட்டில் தவறாளராகிய இலங்கைப் பிரசை ஒருவரை இலங்கைக்கு ஒப்டைத்தல் தொடர்பான ஏற்பாடுகள் 1995ம் ஆண்டின் 5ம் இலக்கச் சட்டத்தால் அமுல்படுத்தப்படுகிறது. அதன்படி 23 இந்திய தவறாளர்கள், 50 பாகிஸ்தான் தவறாளர்கள் மற்றும் மாலைதீவு தவறாளர் ஒருவரும் அந்நாடுகளுக்கு ஒப்டைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய இராச்சியத்தில் தவறாளர்களாகிய இலங்கையர் இருவர் அவர்களது சிறைத்தண்டனயை செயற்படுத்துவதற்காக இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையிடம் ஒப்டைக்கப்பட்டுள்ளனர். மாலைதீவிலிருந்து 10 இலங்கைத் தவறாளர்களை வருங்காலத்தில் இலங்கையிடம் ஒப்படைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இலங்கை மற்றும் வியட்நாம் அரசுகளுக்கிடயே ஒரு சிறைச்சாலை பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

- **சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம்**

இலங்கையில் முதலாவது சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையத்தை தாபிக்கப்போவதாக 2011 டிசம்பர் மாதத்தில் நீதி அமைச்சால் அறிவிக்கப்பட்டது. இந் நிலையத்தின்மூலம் ஏதேனுமொரு வர்த்தகப் பிணக்குகளை தீர்ப்பதற்காக சர்வதேச கம்பனிகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இலங்கையை இவ் வலயத்தில் அமைந்துள்ள சர்வதேச நடுத்தீர்ப்பு மையமாக்குவதே அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும். இக் கருத்திட்டத்திற்காக நீதி அமைச்சினால் ஆரம்பத்தில் 100 மில்லியன் ரூபா

தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. உலக வர்த்தக நிலையமானது வர்த்தக மையத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும் சர்தேச நடுத்திர்ப்புக்குத் தேவையான ஏனைய வசதிகளான நட்சத்திர ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவரும் கவர்ச்சிகரமான இடங்களுக்கு மிகவும் அண்மையில் உள்ளதாலும் உலக வர்த்தக நிலையத்தின் 6 ஆம் மாடி தற்போது சர்தேச நடுத்தீர்ப்பு நிலையமாகத் தயார்செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக கம்பனியொன்றை அமைத்துக்கொள்வதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கம்பனியின் அமைப்பு அகவிதிகள் தயாரிக்கப்படுகின்றன. நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நடுத்தீர்ப்புப்பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், நடுத்தீர்ப்பாளர்களை பயிற்றுவித்தல் போன்ற நடுத்தீர்ப்புடன் சார்ந்த செயற்பாடுகளுக்காக வெகு விரைவில் நிலையம் திறந்துவைக்கப்படும்.

- **வெளிநாடுகளிலுள்ள எதிராளிகளுக்குக் கையளிப்பதற்கு இலங்கையின் நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற அழைப்பாணைகள் பற்றிய விபரம்**

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களினபோது பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய சட்டத்திற்கமைவாக, 2014 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு 1,004 வெளிநாட்டு அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| **நாடுகள்** | **வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை** | **நாடுகள்** | **வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 85 | பிரான்ஸ் | 41 |
| கனடா | 81 | இந்தியா | 45 |
| சைப்ரஸ் | 11 | யப்பான் | 27 |
| ஜேர்மனி | 13 | கொரியா | 18 |
| இத்தாலி | 196 | லெபனான் | 05 |
| யோர்தான் | 28 | நியூசிலாந்து | 02 |
| குவைத் | 35 | சவூதி அரேபியா | 34 |
| மலேசியா | 11 | சுவிற்ஸர்லாந்து | 24 |
| கட்டார் | 43 | ஐக்கிய அரபு எமிரேட்டு | 110 |
| சிஷெல்ஸ் | 01 | ஐக்கிய அமெரிக்கா | 62 |
| ஐக்கிய இராச்சியம் | 129 | வெனிசுலா | 01 |
| சீனா | 02 | **மோத்தம்** | **1,004** |

- **குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி தொடர்பான உடன்படிக்கை**

இலங்கைக்கும் பெலாரஸிற்குமிடையிலான குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி சம்பந்தமான உடன்படிக்கையானது இரு தரப்பினருக்கும் விசாரணைகள், வழக்குகள், விளக்கங்கள் மற்றும் அதன் விளைவான நடவடிக்கைகள் உட்பட குற்றவியல் நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் பரஸ்பர சட்ட உதவியை வழங்குகிறது. இலங்கையின் நீதி அமைச்சுக்கும் பெலாரஸ் குடியரசின் நீதி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம் இரு தரப்பினருக்கிடையே அவர்களின் சட்ட முறைகள், நிறுவனங்கள் மற்றும் சட்டவாக்கம் என்பவற்றை விருத்தி செய்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் இரு தரப்பினருக்கும் நன்மை ஏற்படும் வகையிலும்

அந்தந்த நாடுகளின் சட்டங்கள் மற்றும் அந்தந்த அரசுகள் ஏற்று அல்லது கையெழுத்திட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்களுக்கமைய ஒரு சட்ட கட்டமைப்பை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

ரஷ்யன் குடியரசுடன் குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்ர சட்ட உதவி மற்றும் கைதிகளைப் பரிமாறல் தொடர்பான ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை "வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முயற்சி" (BIMSTEC) என்னும் அமைப்புடனும் பரஸ்பர சட்ட உதவி சம்பந்தமான பேச்சுவார்த்தையில் பங்குபற்றியது. 2014ம் ஆண்டில் இலங்கை குற்றவியல் நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி தொடர்பான உடன்படிக்கையை சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ளது.

- **ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி.) சட்ட அமுலாக்கம், நீதியை அணுகுதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பனவற்றைப் பலப்படுத்தும் கருத்திட்டம்**

2014 பெப்ரவரியில் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்த இக் கருத்திட்டத்தின் மூலம் பல அலுவல்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பல நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- சட்டத்தின் தாமதத்தை குறைத்துக் கொள்வதை பிரதானமாக எதிர்பார்க்கும் இக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரதிபலனாக வழக்கு அறிக்கைகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செற்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசேட மொழிபெயர்ப்புக் கூறொன்று தாபிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 98 வழக்கு அறிக்கைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- இக் கருத்திட்டத்தின் உதவியுடன் இலங்கை கனிஷ்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் முதலாவது கருத்தரங்கு தீவு முழுவதிலும் பரவியுள்ள இருநூறு கனிஷ்ட சட்டத்தரணிகளின் பங்குபற்றலுடன் (வட மாவட்டங்களிவிருந்து 35 சட்டத்தரணிகள் உட்பட) நடாத்தப்பட்டதுடன். இதில் மாண்மிகு பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஆகியொரின் பங்குபற்றலுடன் உயர்மட்டத்திலான கலந்துரையாடலோன்று நடாத்தப்பட்டது. சட்டத்தின் தாமதங்கள் உட்பட நீதித்துறையில் நிலவுகின்ற பிரதான சவால்கள் இக் கருத்தரங்கில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

- 2014 யூலை மாதத்தில் எல்லா பங்காளர்களின் பங்குபற்றுதலுடன் நீதிமன்ற விடயம் சம்பந்தமான தேசியதொழிற்பாட்டுக் குழுவொன்று தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

- காலிமாவட்டத்தின் நீதித்துறை சாராத பணியாட்தொகுதியினரை இலக்காகக் கொண்டு உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இக் கருத்திட்டம் நீதி அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

- நீதிக்கான அணுகுதலை மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கருத்திட்டத்தின் மூலம் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளிலும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

- சிறைச்சாலைகளில் சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உதவியளித்தல் பற்றியும் சட்ட உதவிகள் பற்றிய தேசிய கொள்கையொன்றை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகவும் இக் கருத்திட்டத்தால் சட்ட உதவி ஆணைக்குழுவுடன் பூர்வாங்க மற்றும் சமாந்தரமான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

- மட்டக்களப்பிற்கு கள வியஜமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்போது வழக்கு முகாமைத்துவ குழுவொன்றை தாபிப்பதற்காக மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிவான், முறைப்பாட்டாளர் மற்றும் பொலிஸ் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் பூர்வாங்க கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- கனிஷ்ட சட்டத்தரணிகளை இலக்காகக்கொண்டு குற்றவியல் சட்டம் மற்றும் பொதுச் சட்டம் தொடர்பாக அண்மைக்காலத்தில் ஏற்பட்ட சர்வதேச அபிவிருத்தி போக்குகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்துக்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கனிஷ்ட தேசிய சட்டக்கருத்தரங்கை நடாத்துதல் தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது.

- சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பொறிமுறை தொடர்பான ஆய்வொன்று இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

- **ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட சிறுவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள்**

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்தி முடிவுறுத்துவதும் துஸ்பிரயோகத்திற்குப் பலியான சிறுவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதுமாகும். இந்த திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களாவன சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சு என்பன வாகும். இந்த புதிய முயற்சி சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குளைத் துரிதப்படுத்தி பொலிஸில் புகார் செய்த தேதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் முடித்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத் திட்டம் சிறுவர்கள் குற்றவியல் நீதி முறைமையில் பங்கேற்கும்போது அவர்கள் மீண்டும் பாதிக்கப்படாமல் தடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. 2014-01-01 தொடக்கம் 2014-12-31 வரையான காலப்பகுதியில் நீதி அமைச்சு பின்வரும் நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

- தேங்கிக்கிடக்கும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.
- நீதிமன்றங்களை புதுப்பித்தல் தொடர்பான பல கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட நீதிவான்களுக்கு "சட்ட முறைமைக்குள் சிறுவர் பாதுகாப்பு" தொடர்பான அறிமுக நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது.
- தண்டனைச் சங்கிலியினுள் உள்ள சவால்கள் சம்பந்தமான விரிவான ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- குற்ற பொறுப்பு தொடர்பான குறைந்தபட்ச வயதைத் தீர்மானிக்கும் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.
- வட மாகாண நீதித்துறை அல்லாத நீதிமன்ற பணியாளர்களுக்காக பயிற்சி நடாத்தப்பட்டது.
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவியுடன் சட்டமா அதிபர் திணைக்கதைதிற்கு இணைய அடிப்படையிலான வழக்கு கண்காணிப்பு முறைமையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழு**

அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற உத்தேச சட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை ஆராய்ந்து அவை தொடர்பாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கௌரவ சுசில் பிரேமஜயந்த அவர்களின் தலைமையில் 2011-08-03 ஆம் திகதி சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது.

அமைச்சரவை உப குழுவின் கீழ் அலுவலர்களின் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அவ்வலுவலர்கள் குழுவினால் சட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகள் ஆராயப்பட்டு அவை தொடர்பான அவர்களது தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் அமைச்சரவைத் துணைக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

நீதி அமைச்சின் செயலாளர் சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உப குழுவின் கூட்டுநர் என்பதுடன் சட்டவாக்கம் சம்பந்தமாக அலுவலர்கள் மட்டத்திலான பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகள்

செய்யப்படுவது நீதி அமைச்சில் ஆகும். அநேகமாக இப் பரிந்துரைகள் சட்டவாக்க வரைவொன்றின் வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பின்னர் அமைச்சரவை உப குழுவினால் அலுவலர்கள் குழுவின் பரிந்திரைகள் வாசித்துப்பார்த்து குழுவின் பரிந்துரைகள் குறித்துக்கொள்ளப்படுகின்றன. நீதி அமைச்சினால் இப் பரிந்துரைகள் கோவைப்படுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பப்படுகின்றன. அமைச்சரவை உப குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா சட்டமூலங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பரிந்திரைகள் தாமதமின்றி அனுப்ப்ப்படுகின்றன.

- **ஆட்கள் வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி**

2010 ஆம் ஆண்டில் ஆட்கள் வியாபாரத்திற்கு எதிரான செயலணியொன்று நீதி அமைச்சினால் நிறுவப்பட்டதுடன் இலங்கைக்குள் ஆட்கள் வியாபாரத்திற்கு எதிராக செயற்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக அறிவுரை வழங்குதல் மற்றும் அச் செயல்களை மேற்பார்வை செய்யும்பொருட்டு இச் செயலணி தேசிய இணைப்பு நிறுவனமாக செயற்படுகிறது. . நாட்டிற்குள்ளே நடைபெறுகின்ற ஆட்கள் வியாபாரங்கள் சம்பந்தமாக கவனஞ் செலுத்தும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களாக இனங்காணப்பட்ட எல்லா அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துதல் இந்த செயலணியின் நொக்கமாகும்

ஆட்கள் வியாபாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக தங்குமிடமொன்றை நிறுவுதல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அவசர தேவை என இச் செயலணி அடையாளங் கண்டுள்ளதுடன் அதன்படி இத்தங்குமிடம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் 2012 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

இச் செயலணியின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று வருடாந்த செயற்திட்டத்தினை உருவாக்குவதாகும். இச் செயலணி மூலம் 2011,2012,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை உறுப்பினர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆட்கள் வியாபாரத்தில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், மதியுரைக்காக அவர்களை நிபுணர்களுக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டு விதிமுறையான தொழிற்பாட்டு நடவடிக்கை முறையொன்று செயலணியியால் உருவாக்கப்பட்டு அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆட்கள் வியாபாரம் பற்றி பொதுமக்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் சம்பந்தமாகவும் உறுப்பினர் நிறுவனங்களை இச் செயலணி மேற்பார்வை செய்யும்.

- **நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம்**

  www.justiceministry.gov.lk நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளமாகும்.

## 5.2 நிருவாக மற்றும் தாபன பிரிவு

நிருவாக மற்றும் தாபன பிரிவின் முதன்மையான குறிக்கோள் நீதி அமைச்சினதும் அதன் கீழ்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பயிற்சி மற்றும் திறமையான மனிதவளங்ளை வழங்குவதற்கு உதவி புரிவதாகும். பணியாட்தொகுதியினரை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்தல், அலுவலர்களைத் தெரிவுசெய்து ஆட்சேர்ப்புச்செய்தல், பயிற்சியளித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு வழங்கல், மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை என்பன இதில் உள்ளடங்குகின்றன. இதன்பிரகாரம் நீதி அமைச்சின் நிருவாக மற்றும் தாபன பிரிவு நீதி அமைச்சுக்கு நேரடியாக இணைக்கப்பட்டுள்ள 215 அலுவலர்களினதும் நாடுபூராவுமுள்ள நீதிமன்றங்களில் பணிபுரியும் 3,697 அலுவலர்களினதும் நிருவாகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ளது.

அத்துடன் கடன் மற்றும் முற்பண அங்கீகாரம், அரச ஊழியர்களின் பிணைப்பொறுப்பு, நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை, என்பனவும் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

மேலும் திடீர் மரணவிசாரணை அதிகாரிகள், சமாதான நீதிவான்கள், சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள், சத்தியப்பிரமாண ஆணையாளர்கள், சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரை நியமிக்கும் பணிகள் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதியில் நிருவாக மற்றும் தாபன பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளின் விபரம் கீழேதரப்பட்டுள்ளது.

- **பதவிகளை உருவாக்கல்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நிதி பிரமாண ஒழுங்குவிதி 71 இற்கு அமைய புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன.

| திணைக்களங்கள்/ நிறுவனங்கள் | பதவி நிலை அலுவலர்கள் | இணைந்த சேவை | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நீதி அமைச்சு | 08 | 08 | 40 | 56 |
| நீதிமன்றங்கள் | - | - | 73 | 73 |
| அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 99 | 113 | 79 | 291 |
| சட்ட ஆணைக்குழு திணைக்களம் | 07 | 15 | 07 | 29 |
| கடன் இணக்க சபை திணைக்களம் | 01 | 14 | 04 | 19 |
| தொழில் நியாயசபை அலுவலகம் | 42 | 295 | 152 | 489 |
| நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 01 | 05 | 04 | 10 |
| இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 07 | 08 | 08 | 23 |
| மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 15 | 102 | 60 | 177 |
| உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 22 | 84 | 74 | 180 |
| மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 05 | 124 | 07 | 136 |
| **மொத்தம்** | | | | **1,483** |

- **ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரித்தலும் அனுமதிக்காக சமர்ப்பித்தலும்**

சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் மூன்று (03) ஆட்சேர்ப்பு திட்டங்கள் அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 01 ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- **ஆட்சேர்ப்பும் நியமனங்களும்**

**ஆட்சேர்ப்பு**

| நிறுவனம் | பதவி | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நீதி அமைச்சு | பணிப்பாளர் (பொறியியலாளர்) | 01 |
| | மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் | 01 |
| | சாரதி | 02 |
| நீதி அமைச்சு (நீதிமன்றங்களுக்கு) | மன்றாணை சேர்ப்பிப்போர் மற்றும் ஆணைநிறைவேற்றுவோர் | 08 |
| தொழில் நியாயசபைகள் அலுவலகம் | சுருக்கெழுத்தாளர்கள் (சிங்களம்) | 62 |
| | சுருக்கெழுத்தாளர்கள் (ஆங்கிலம்) | 01 |
| மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | சாரதி | 01 |

**நியமனங்கள்**

கௌரவ நீதி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அவரினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் நியமனங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | நியமனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சத்தியப்பிரமாண ஆணையாளர் | 255 |
| திடீர் மரணவிசாரணை அதிகாரி | 28 |
| தற்காலிகம் | 18 |
| சமாதான நீதிவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்கள் | 43 |
| சமாதான நீதிவான்கள், | 4,514 |
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் | 70 |

**சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை சிபாரிசுசெய்தல்**

| நடைபெற்ற பரீட்சைகளின் விவரங்கள் | பரீட்சார்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச்செய்வதற்கான | 299 |

- **பயிற்சி**

**உள்ளூர்**

| **பயிற்சியின் தன்மை** | **அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| விடய ஆய்வு | 76 |
| மொழிகள்: தமிழ் மொழி | 160 |
| மனித உரிமைகள் டிப்ளோமா | 25 |
| ஊக்கமளித்தல் பயிற்சி | 02 |

**வெளிநாடு**

| **பயிற்சியின் தன்மை** | **அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| பயிற்சி (நீதிபதிகள் உட்பட) | 208 |
| மாநாடுகள் | 11 |

- **கடன் அங்கீகாரம்**

| **கடன் வகை** | **தரப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூபா)** |
|---|---|---|
| ஆதனம்/ வீடமைப்புக் கடன் | 102 | 137,615,940.00 |
| இடர் கடன் | 72 | 5,089,886.00 |
| பண்டிகை முற்பணம் | 163 | 815,000 |
| விசேட முற்பணம் | 68 | 170,000.00 |

- **ஏலவிற்பனை**

| **ஏலவிற்பனைகளின் எண்ணிக்கை** | **செயல்முறை தொகை (ரூபா)** |
|---|---|
| 130 | 40,871,625.40 |

- **நீதிபதிகளுக்கான "சுவசம்பத" காப்புறுதித் திட்டம்**

| **சேர்த்துக்கொள்ளப்பட்ட நீதிபதிகள்** | **வழங்கப்பட்டதொகை (ரூபா)** |
|---|---|
| 226 | 5,002,642.50 |

- **அலுவலக வாகனங்களுக்கான காப்புறுதி**

| **திணைக்களம்** | **அலுவலக வாகனங்களின் எண்ணிக்கை** | **காப்புறுதி வகை** | **தொகை (ரூபா)** |
|---|---|---|---|
| அமைச்சரின் அலுவலர்கள் | 10 | (பூரண காப்புறுதி) | 1,447,883.00 |
| நீதித்துறை அலுவலர்களின் அலுவலக வாகனம் | 157 | (பூரண காப்புறுதி) | 8,825,631.03 |
| | 03 | (மூன்றாம் நபர் காப்புறுதி) | 3,467.56 |
| அமைச்சின் அலுவலக வாகனம் | 20 | (பூரண காப்புறுதி) | 926.502.63 |
| | 06 | (மூன்றாம் நபர் காப்புறுதி) | 8,455.47 |

- **பிற செயற்பாடுகள்**

  - பின்வரும் அலுவலர்களுக்கு வினைத்திறன் தடைப்பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| நீதிமன்ற பாதுகாவலர்கள் | - 158 | மன்றாணை சேர்ப்பிப்போர் மற்றும் ஆணைநிறைவேற்றுவோர் | - 46 |
| பிஸ்கால் மேற்பார்வையாளர்கள் | - 10 | கட்டியக்காரர் | - 03 |

  - உற்பத்தித்திறன் கோட்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நீதிமன்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு நடாத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் காலி, தங்காலை, அம்பாந்தோட்டை ஆகிய நீதித்துறை வலயங்களுக்குள் வரும் 31 நீதிமன்றங்களின் அலுவலர்களுக்கும் நீதி அமைச்சின் அலுவலர்களுக்கும் நடாத்தப்பட்டன.
  - அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, திருகோணமலை, கேகாலை, சிலாபம், புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உற்பத்தி திறன் விருது போட்டியில் சிறந்த நீதிமன்றத்திற்கு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன.


## 5.3 உட்கட்டமைப்புப் பிரிவு

நீதி அமைச்சின் உட்கட்டமைப்புப் பிரிவானது நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல், பேணல், மற்றும் காணி கொள்ளல் போன்ற நீதிமன்ற முறைமைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அமைச்சில் முக்கிய பணியொன்றை ஆற்றுகின்றது.

**பின்வரும் கருத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன**



1. மட்டக்களப்பு புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி




2. சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றக் கட்டிடம்

3. கெக்கிராவை மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற அலுவலகமும் ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
4. உடுகம நீதிவான் நீதிமன்ற அலுவலகக் கட்டிடம்
5. பிபில நீதிவான் நீதிமன்ற கட்டிடம்
6. வெள்ளைமணல் காதி நீதிமன்றம்
7. கல்பிட்டி சுற்று நீதிவான் நீதிமன்றம்
8. பொல்காவல நீதிவான் நீதிமன்ற சாட்சிப்பொருளறையும் ஆவணக்காப்பறையும்

**பின்வரும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன**




1. காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி



2. வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி




3. ஹோமாகம நீதிமன்ற கட்டிடத் தொகுதி

4. சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம்
5. கலகெதர நீதிமன்ற கட்டிடம்
6. எல்பிட்டிய நீதிவான் நீதிமன்ற அலுவலகமும் ஆவணக்காப்பறையும்

7. ஹிங்குராங்கொட மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
8. மஹியங்கனை நீதிவான் நீதிமன்ற ஆவணக்காப்பறையும் சாட்சிப்பொருளறையும்
9. மூதூர் நீதிவான் நீதிமன்றம்
10. நாஉல நீதிவான் நீதிமன்ற சாட்சிப்பொருளறையும் ஆவணக்காப்பறையும்
11. நொச்சியாகம சுற்று நீதிவான் நீதிமன்றம்
12. மாத்தறை நீதிமன்ற கட்டிடத் தொகுதி
13. புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி
14. கெஸ்பாவ, கல்கமுவ, திஸ்ஸமஹாராமய, ஹெற்றிபொல, நொச்சியாகம, ஆனமடுவ ஆகிய நீதிமன்றங்களில் ஆவணக்காப்பறையையும் சாட்சிப்பொருளறையையும் நிர்மாணித்தல்
15. வெல்லவாயா நீதிவான் நீதிமன்ற ஆவணக் காப்பறையும் சாட்சிப்பொருளறையும்

**பின்வரும் கட்டிடங்கள் 2014இல் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன.**

1. கேகாலை நீதிபதியின் வங்களா திருத்தவேலை
2. வத்தளை நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
3. மஹர நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் சாட்சிப்பொருளறையும் பொலிஸ் சாவடியையும் மேலதிக நீதிமன்றமாக மாற்றியமைத்தல்
4. ஹோமாகம மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
5. பாணந்துறை நீதிவான் நீதிமன்ற சாட்சிப்பொருளறையை மேலதிக நீதிவான் நீதிமன்றமாக மாற்றியமைத்தல்
6. நுரெலியா மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்தவேலை
7. மாத்தறை மாவட்ட நீதிபதியின் வங்களா திருத்தவேலை
8. தெஹியத்தகண்டி நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
9. சியம்பலாந்துவ சுற்று நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
10. கந்தளாய் நீதிவான் நீதிமன்ற திருத்தவேலை
11. வரக்காபொல மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் விடுதி திருத்தவேலை
12. பொலனறுவை மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி திருத்தவேலை

**2014 ஆகஸ்ட் 31ம் திகதியில் உள்ளவாறான நிதிரீதியான முன்னேற்றம்** (228-1-1)

| | விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| **2104** | **கட்டிட நிர்மாணம்** | **627,800,000** | **526,218,073** |
| *1* | * காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி | *100,000,000* | *137,641,482* |
| *2* | * *ஹோமாகம நீதிமன்ற கட்டிடத் தொகுதி* | *100,000,000* | *110,652,027* |
| *3* | வத்தளை நீதிமன்றக் கட்டிடத்தொகுதி | *50,000,000* | *33,252,564* |
| *4* | மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டிடத்தொகுதி கட்டம் i | *80,000,000* | *11,575,755* |
| | " கட்டம் ii | | *8,615,510* |
| *5* | சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம் | *67,500,000* | *39,224,886* |
| *6* | கலகெதர நீதிமன்ற கட்டிடம் | *5,000,000* | *12,532,566* |
| *7* | சிறிய அளவிலான கருத்திட்டங்கள் | *225,300,000* | *172,723,283* |
| **2001** | **கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் புனரமைப்பு** | **160,000,000** | **174,606,528** |
| | **மொத்தம்** | **787,800,000** | **700,824,601** |

* நி.பி. மாற்றல்

## 5.4 கணக்குகள் பிரிவு

அமைச்சின் கணக்கீட்டு முறையை வினைத்திறனுள்ளதாகவும் பயனுறுதியுள்ளதாகவும் மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டவாறு அமைச்சு நிருவாகம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் ஆகிய செலவின தலைப்புகளின் கீழ் வரும் கணக்குகளை சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக நீதி அமைச்சிற்கு பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கௌரவ அமைச்சரின் அலுவலகம்
2. நீதி அமைச்சு நிருவாகம்
3. நீதி மன்றங்களின் நிருவாகம்
4. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
5. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**நிதிரீதியான முன்னேற்றம் (2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை)**

**அமைச்சு நிருவாகம் 110-1, 2 & 3**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 600,1960,050 | 559,117,600 |
| மூலதன செலவினம் | 153,146,950 | 88,342,651 |
| **மொத்தம்** | **753,343,000** | **647,460,251** |

**நீதிமன்ற நிருவாகம் 228- 1 , 2**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 4,075,550,000 | 4,053,688,052 |
| மூலதன செலவினம் | 1,026,900,000 | 877,423,341 |
| **மொத்தம்** | **5,102,450,000** | **4,931,111,393** |

## 5.5 திட்டமிடற் பிரிவு

திட்டமிடல் பிரிவு அமைச்சிலும் அதன் கீழ் வரும் திணைக்களங்களிலும் உள்ள கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பான பணிகளுடன் பின்வரும் பணிகளையும் ஆற்றுகிறது: -

- அமைச்சுக்காக வருடாந்த மூலதன வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயார் செய்தல்
- வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை தயார் செய்தல்.
- காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
- நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணித்தல் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்தல்.
- முன்னேற்ற அறிக்கையை தயார் செய்தல் (எதிர்வரும் ஆண்டின் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).
- வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களைத் திரட்டுதல்
- வழக்குகள் பற்றிய வருடாந்த அறிக்கையை தயார் செய்தல்.

- கருத்திட்ட அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த கணக்கு அறிக்கைகளை பாரளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீதி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்ட ரீதியான மற்றும் பிரதேச ரீதியான அபிவிருத்தி கருமங்களை மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் கூட்டிணைத்தல்.
- "தயட கிருள" தேசிய அபிவிருத்தி கண்காட்சி சம்பந்தமான வேலைகள்
- பாராளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டத்தினை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பாராளுமன்ற வினா சம்பந்தமான ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கெள்ளல்

## 5.6 நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள நீதிமன்றக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது. அதன்படி, இந்த பயிற்சி நிறுவனம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக நீதித்துறையல்லாத அலுவலர்களுக்கு பல நிகழ்ச்சிகளை நடாத்தியது.

1. மனப்பாங்குகளையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல்
2. கடமைகளை விளங்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வு
3. நவீனமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு
4. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்

**2014 ஜனவரி 01 இல் இருந்து 2014 டிசம்பர் 31 வரை பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.**

| தொடர் இல. | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை | நீதித்துறை வலயங்கள் |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக உதவுயாளர் | 26 | 495 | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, அவிசாவளை, நீர்கொழும்பு, காலி, கேகாலை, குருணாகல், மாத்தறை, சிலாபம், கண்டி, எம்பிலிபிட்டி, கேகாலை |
| 02 | மன்றாணை சேர்ப்பிப்போர் மற்றும் ஆணை நிறைவேற்றுவோர் | 06 | 108 | காலி, அவிசாவளை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கண்டி, மாத்தறை, |
| 03 | வலய அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் | 06 | 521 | களுத்துறை, நீர்கொழும்பு, மாத்தறை, குருணாகல் |
| 04 | முகாமைத்துவ | 02 | 40 | அவிசாவளை, நீர்கொழும்பு, காலி, |

| | | | | |
|---|---|---|---|---|
| | உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | | | மாத்தறை, குருணாகல், கண்டி, அம்பாந்தோட்டை, எம்பிலிபிட்டி |
| 05 | பணம்செலுத்தும் முறை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சிகள் | 08 | 181 | கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி, குருணாகல், அவிசாவளை, இரத்தினபுரி, கண்டி.குலியாபிட்டி, கம்பகா. |
| 06 | பண்டசாலை கணக்கெடுப்பு | 08 | 169 | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, ருணாகல். |
| 07 | ஆளணி கோப்புக்களைப் பேணல் | 06 | 135 | அவிசாவளை, நீர்கொழும்பு, காலி, மாத்தறை, குருணாகல், கண்டி, இரத்தினபுரி. |
| 08 | சுருக்கெழுத்தாளர்களுக் கான பயிற்சி நிகழ்ச்சி | 04 | 34 | கொழும்பு, அவிசாவளை. |
| 09 | பெறுகை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சிகள் | 06 | 91 | நீர்கொழும்பு, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கேகாலை |
| 10 | கணக்குக்கி கிளையிலுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 25 | |
| 11 | ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சிகள் | 04 | 75 | அவிசாவளை, களுத்துறை, பாணந்துறை காலி |

## 5.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், மற்றும் 03 நியதிச்சட்ட நிறுவனங்களான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிருவாக சபை, நீதிபதிகள் நிறுவனம், சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் அமைச்சு நிருவாகச் செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உதவிக்கருத்திட்டமாக இயங்கும் தொழில் நியாய சபை அலுவலகம் மற்றும் நீதிமன்ற செலவினத் தலைப்பின் கீழ் உள்ள மேல் நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியனவற்றின் கணக்காய்வினை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவு மேற்கொள்கின்றது.

இப் பிரிவு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரினது தலைமையில் ஒரு கணக்காளரினதும் 06 நிதி உதவியாளர்களினதும் 05 முகாமைத்துவ உதவியாளர்களினதும், 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும், உதவியுடன் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இவ்வலுவலர்கள் மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் முறைமை கணக்காய்விற்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் 2014 சனவரி முதல் டிசம்பர் வரை 13 மேல் நீதிமன்றங்கள், 21 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 18 மாவட்ட நீதிமன்றங்கள், 24 நீதவான் நீதிமன்றங்கள், 12 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள், 01 விசேட கணக்காய்வு பரிசோதனைகள் உள்ளடங்கலாக 88 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 06.அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

## 6.1 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**நோக்கு**

நியாயமான சட்டத்தை மதிக்கின்ற சமுதாயத்தைக் கட்டியேழுப்புதல்

**செயற்பணிகள்**

நீதிமன்றங்கள், சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்ட மருத்துவ, மற்றும் உணவு விஞ்ஞானம் பற்றிய பகுப்பாய்வு, அறிவுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்.

இலங்கையிலுள்ள ஒரேயொரு சட்ட ஆய்வுகூடத்தை கொண்டுள்ள அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் உணவு விஞ்ஞானப்பிரிவு, சட்ட விஞ்ஞானப்பிரிவு ஆகிய இரு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. உணவு விஞ்ஞானப் பிரிவானது உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் ஆகிய நான்கு ஆய்வுகூடங்களை உள்ளடக்கியுள்ளது. சட்ட விஞ்ஞானப் பிரிவானது எறிபடைத்துறை பிரிவு, நீர்ப்பாயவியல், நஞ்சியல் பிரிவு, வெடிமருந்துகள் & தீ புலனாய்வுப் பிரிவு, போதை மருந்துகள் பிரிவு, சந்தேகத்திற்கிடமான ஆவண பிரிவு பல்லின பிரிவு ஆகிய ஏழு துறைகளைக் கொண்டுள்ளது.

இது சேவை வழங்கும் ஒரு திணைக்களமாவதுடன் நீதிமன்றங்கள், பொலிஸ் திணைக்களம், சுங்கத் திணைக்களம், வடிசாலை திணைக்களம்' துறைமுகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களம், பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் ஆற்றுப்படுத்தப்படுகின்ற சான்றுப்பொருட்களை விஞ்ஞான பரிசோதனைக்கு உட்படுத்தி அவைபற்றிய அறிக்கைகளை இத்திணைக்களம் வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதிரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்களுக்காக பரிசோதனை செய்யப்படுவதுடன் இலங்கை சுங்கத்தால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற மாதிரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்கள் மற்றும் சுங்கவரி வகைப்படுத்தலுக்காக பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேக ஆவணங்களை பரிசோதனை செய்து அறிக்கையிடுதல் இத் திணைக்களத்தின் மூலம் செய்யப்படுகின்றது.

பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படும் எல்லா சான்றுப்பொருட்களும் உணவு மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிக் கட்டளைச்சட்டம், புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகாரசபை சட்டம், ஒப்பனைச் சாதனங்கள் உபாயங்கள், அவுடதங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச்சட்டம், விசம், அபின், மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சன்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பரிசோதனைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.


தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுகின்ற நிறுவனங்களில் விஞ்ஞான மதியுரைஞர்களாகவும் இத்திணைக்களம் செயலாற்றுகிறது. விசேஷமாக, இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு தரத்தை உருகாக்குவதில் இந்நிபுணர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இந்நிபுணர்கள் பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க உதவிபுரிகின்றனர்.

இத் திணைக்களம் 2013 மே மாதம் முதல் பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடமொன்றிற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அத்தியாவசியமாகத் தேவைப்படும் டீ.என்.ஏ. ஆய்வுகூடமென்று தேவையான எல்லா உபகரணங்களுடனும்

இவ்வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திணைக்களம் குருநாகலில் மாகாண ஆய்வுகூடமொன்றை நிறுவியுள்ளது.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| பகுதி | 2013.12.31 இல் உள்ள வழக்குகள் | பெறப்பட்ட வழக்குகள் | அறிக்கையிடப்பட்ட வழக்குகள் | 2014.12.31 இல் அறிக்கையிடப்படாது உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| போதை வஸ்துக்களும் பிற மருந்துகளும் | 675 | 6,089 | 6,438 | 326 |
| சுடுபடைக்கலன்களும் யுத்த தளபாடங்களும் | 816 | 359 | 721 | 454 |
| வெடிபொருளும் தீப்பிடித்தலும் | 530 | 351 | 627 | 254 |
| நச்சுப்பொருட்கள் | 2,397 | 1,989 | 3,084 | 1,302 |
| இரத்தம் மற்றும் பிற சரீர திரவங்கள் | 1,401 | 1,162 | 1,367 | 1,196 |
| ஆட்சேபனைக்குரிய பத்திரங்கள் | 570 | 773 | 960 | 383 |
| பல்வேறு சட்ட மருத்துவப் பொருட்கள் | 231 | 246 | 282 | 195 |
| தலைமை அலுவலக நீதிமன்ற மாதிரிகள் | 317 | 2,306 | 2,622 | 1 |
| பல்வேறு குடிவகை மற்றும் புகையிலை | 112 | 1,135 | 1,239 | 8 |
| குடிவகை- குருநாகல் | 563 | 3,151 | 3,687 | 27 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 529 | 5,250 | 5,686 | 93 |
| பல்வேறு- உணவு வகைகள் | 38 | 1,517 | 1,503 | 52 |
| **மொத்தம்** | **8,179** | **24,328** | **28,216** | **4,291** |




**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம் (233-01-01)**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | *182,808,000* | *174,368,000* |
| *மூலதன செலவினம்* | *118,667,000* | *87,483,000* |
| ***மொத்தம்*** | ***301,475,000*** | ***261,851,000*** |

## 6.2 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம்இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

**நோக்கு**

நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல்.

**செயற்பணிகள்**

சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்காக சட்ட ஆணைக்குழுச் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்தல்.

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுகளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமாக சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்
IX. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை, பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
X. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கைமுறை உட்பட சட்ட நடவடிக்கைமுறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

**சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தால் பின்வரும் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

1. மருத்துவ வழக்கு விசாரணைகள் பற்றிய உத்தேச சட்ட முறைமையை அவதானித்தல்.
   சட்ட ஆணைக்குழுவின் அவதானிப்புக்காக சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட மருத்துவ வழக்கு விசாரணைகள் பற்றிய சட்டமூலத்தை சட்ட ஆணைக்குழு ஆராயும்.

2. சட்டமுறை கற்பழிப்பு தொடர்பாக தண்டனை வழங்கும் கொள்கையை திருத்தம் செய்வதற்குப் பரிசீலனை செய்தல்
3. அடுக்குமாடி உரிமை சட்டத்தில் உத்தேச திருத்தங்களை செய்வதற்கான அவதானிப்பு.
4. பாலியல் பலாத்காரம், தகாப் பாலுறவு, பிறப்பிலுள்ள குறைபாடு போன்ற சந்தர்ப்பங்களில் கருத்தரித்தலை மருத்துவரீதியில் முடிவுறுத்துதல் சம்பந்தமான ஒழுங்கு விதி
5. குடியியல் வழக்கு விசாரணைகளில் சத்தியக்கடதாசிகளின் மூலம் சான்றுகளைச் சமர்ப்பித்தல்.
6. காணி கொள்ளல் மற்றும் தொடர்புடைய சட்டங்களை பரிசீலனை செய்தல்
7. வழக்கு தீர்ப்புகளின் துணையுடன் காணியை கைமாற்றுதல், நன்கொடை அளித்தல் மற்றும் பராதீனப்படுத்துதல் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்தல்.
8. சட்ட தாமதங்கள் தொடர்பாக தற்போது நடைமுறையிலிருக்கும் நடவடிக்கை முறைகள் சார்ந்த சட்டங்களை மீளாய்வு செய்தல்.
9. பயனுள்ளதாக நீதியை நிருவகித்தல் சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு ரிதியான மற்றும் சட்டத்தின் பிற ஏற்பாடுகளை பரிசீலனை செய்தல்.
10. நீர் வளங்கள் முகாமைத்துவத்தை பாரிசீலனை செய்தல்
11. கொள்முதல் செயல்முறை சட்டங்களை ஆக்குதல்.
12. வர்த்தக சட்டத்தின் பல்வேறு அம்சங்களை பாரிசீலனை செய்தல் (பங்குடமை சட்டம், சரக்கு விற்பனை கட்டளைச் சட்டம், கடல்மூலமாக கொண்டுசெல்லும் கட்டளைச் சட்டம், கடற்படைக் கட்டளைச் சட்டம் ..., முதலியன)
13. அடமானச் சட்டத்தை ரத்துச் செய்து புதிய சட்டத்தைக் கொண்டுவருதல்.
14. உயிர் பன்முகத்தன்மை மற்றும் வனசீவராசிகள் தொடர்பான தற்போதைய சட்டத்தின் போதுமான தன்மையை பரிசீலனை செய்தல்
15. இலங்கையில் விளையாட்டுக்கள் தொடர்பாக சட்ட ஆட்சியை பரிசீலனை செய்தல்
16. பால்நிலை பாகுபாட்டு தொடர்பான சட்டங்களை பரிசீலனை செய்தல்.
17. ஆதனச் சட்டத்தை மீளாய்வு செய்தல்.
18. சூழல் பாதுகாப்பு தொடர்பாக அனுமதி வழங்கல் **மற்றும் ஏற்பாடுகளை** அமுலாக்கலை மீளாய்வு செய்தல்.
19. குற்றவியல் சட்டத்தின் சில அம்சங்களை மீளாய்வு செய்தல்.

**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 13,950,000 | 10,818,000 |
| மூலதன செலவினம் | 1,750,000 | 933,520 |
| **மொத்தம்** | **15,700,000** | **11,751,520** |

## 6.3 கடன் இணக்க சபை திணைக்களம்

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கு**
அசையா சொத்து சம்பந்தப்பட்ட கடனை திருப்பி செலுத்துவதற்கு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ஒரு நிவாரண ஏற்பாட்டை வழங்குதல்.

**செயற்பணிகள்**
கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீது பெறப்பட்ட கடன்களை குறைந்த வட்டி வீதத்துடன் தவணைமுறையில் செலுத்துவதன்மூலம் பிணையாக வைக்கப்பட்ட விவசாய நிலங்கள், வீடு போன்ற அசையா சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கடன்பட்டோருக்கு சட்டப் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கல்

**குறிக்கோள்**
அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது.

கடன் இணக்க சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவரில் ஒருவர் சபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு எந்தவித கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. அத்துடன் இச்சபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை எதுவும் கிடையாது. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணமாக ஒரு சிறிய தொகை மாத்திரமே அறவிடப்படுகிறது. ஆகவே கடன் சுமையால் பாதிக்கப்பட்ட சராசரி நபரொருவருக்கு மிகப்பெரிய சேவையொன்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சட்டத்தரணிகள் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது கட்டாயமில்லாதிருப்பது பொதுமக்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இச்சபையின் நடைமுறை நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இச்சபையில் எட்டப்படும் உடன்படிக்கைகள் கட்சிக்காரர்களினது இணக்கத்துடன் ஏற்படுவதேயன்றி சபையின் பணிப்பின்மூலம் அமுல்படுத்தப்படுவதல்ல. ஆயினும் கடன் இணக்க சபைக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப கடனாளிக்கு நியாயமற்ற முறையிலான வட்டித் தொகையொன்றை செலுத்த வேண்டியிருப்பின் அத் தொகையை குறைப்பதற்கும் சபையினால் வழங்கப்படும் யோசனையை கட்சிக்கார்ர்கள் ஏற்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் இக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கடன்பட்டோருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்கவும் இச் சபைக்கு அதிகாரம் உள்ளது. மேலும் கடன் கொடுத்தோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட சபையின் கடைசி விசாரணைக்கு ஆஜராகத்தவறும் சந்தர்ப்பத்தில் நிபுணத்துவ விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு அதன்பின் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| விபரம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்கொண்டு-வரப்பட்ட விண்ணப்பங்கள் 2014.01.01 | 715 |
| புதிய விண்ணப்பங்கள் | 454 |
| மீளாய்வுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 49 |
| மொத்த விண்ணப்பங்கள் 2014.12.31 | 1,218 |
| தீர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் | 154 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 214 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 29 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 03 |
| மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 30 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டமொத்த விண்ணப்பங்கள் | 430 |
| 2014.12.31 இல் உள்ளவாறான மிகுதி விண்ணப்பங்கள் | 788 |

**2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம் (231-01-01)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 9,720,000 | 7,960,400 |
| மூலதன செலவினம் | 1,250,000 | 1,059,000 |
| **மொத்தம்** | **10,970,000** | **9,019,400** |

## 6.4 சட்ட உதவி ஆணைக்குழு

1978ம் ஆண்டின் 27ம் இலக்க சட்ட உதவி சட்டத்தினால் சட்ட உதவி ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இலங்கையில் தகுதியுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட உதவிகளை பெற்றுக் கொடுப்பது இதன் தலையாய நோக்கமாகும். குறைந்த வருமானத்தை பெறுகின்ற மக்களினது வழக்கு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக இலவச சட்டத்தரணி உதவிகளை பெற்று கொடுப்பதும் சட்ட ஆலோசனைகளை பெற்று கொடுப்பதும் சமுதாயத்திற்கு சட்டம் பற்றிய விழிப்புணர்வை அளிப்பதும் இதன் பணிகளாகும். நீதிமன்றம் மற்றும் பிற மன்றங்களில் பிரதிநிதித்துவப்படுத்துதல் உட்பட பின்வரும் பிரிவுகளின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **சட்டப்பிரிவு: தகுதியுடைய மக்கள் சார்பாக சட்ட உதவி நீதிமன்ற பிரதிநிதித்துவம்**

நேரடியாக தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கொழும்பு சட்ட உதவி நிலையம் உள்ளடங்கலாக 76 சட்ட உதவி நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இச் சட்ட உதவி நிலையங்களின் பிரதான பணி வழக்காடுவதாகும். தகுதியுடைய மக்களுக்கு அதாவது ரூபா. 15,000 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. பெண்கள் தமக்கு அல்லது தமது பிள்ளைகளுக்கு ஜீவனாம்சத்தைக் கோரும்போது அவர்களது வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது அவர்களுக்காக நீதிமன்றத்தில் ஆஜராவதன்மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றது.

**சட்ட உதவி ஆணைக்குழுவினால் கையாளப்பட்ட வழக்குகள்**

| விபரம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 ம் ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்டவை | 31,775 |
| புதிதாக சேர்ந்த வழக்குகள் (சனவரி 2014 - டிசம்பர் 2014) | 9,596 |
| முடிவுற்ற வழக்குகள் (சனவரி 2014 - டிசம்பர் 2014) | 20,7466 |
| அடுத்த மாதத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டவை | 20,625 |
| சட்ட உதவி ஆணைக்குழுவினால் (சேவை வழங்கப்பட்ட மொத்த சேவை நாடுனர்கள் (சனவரி 2014 - டிசம்பர் 2014) | 56,992 |

**ஊடக நிகழ்ச்சிகள்**

- **தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்**

  பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் அழைப்பின் பெயரில் சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலர்கள் சட்டம் சம்பந்தமான பல்வேறு நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடாத்தினார்கள். சனவரி 2014 தொடக்கம் - டிசம்பர் 2014 வரை அத்தகைய பல நிகழ்ச்சிகள் பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் நடாத்தப்பட்டன.

- **புதினப் பத்திரிகைகளில் வினா விடை பகுதிகள்**

  இச் சேவை மக்கள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சட்ட அறிவை மேம்படுத்துவதற்குமான இன்னொருவிதமான உதவியாகும். மேலும் சட்ட உதவிப் பக்கங்கள் சட்ட விடயங்கள் சம்பந்தமான ஆசிரியர் தலையங்கங்களையும் கொண்டுள்ளன.

## அபிவிருத்தி சட்ட உதவி பிரிவுகள்

- **புலம்பெயர்ந்த தொழிலாளர் உரிமை பிரிவு**

2014 இல் இப்பிரிவு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. ஆலோசனைகளைத் தொடர்ந்து அந்நபர்கள் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவுக்கோ அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கோ அனுப்பப்பட்டனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன: சம்பளம் கொடுக்கப்படாமை, பாலியல் தொல்லை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாடுகளில் மரணமடைதல், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படல்.

2014ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை இப் பிரிவு புலம் பெயரவுள்ள தொழிலாளர்கள், புலம் பெயர்ந்த மற்றும் புலம் பெயரவுள்ள தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவர்களின் நலனுக்காக சட்ட உதவி நிகழ்ச்சிகளை நடாத்தியது. சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- **பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் பிரிவு**

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு சட்ட உதவி ஆணைக்குழுவினதும் அமைச்சினதும் நோக்கங்களை அடைவதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படுகிறது. ஆணைக்குழு ஒக்டோபர் 2014இல் முல்லைத்தீவில் இரு பிரதேசங்களில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடாத்தி சர்வதேச சிறுவர் தினத்தை நினைவு கூர்ந்தது. அத்துடன் ஹட்டன் சட்ட உதவி நிலையத்தால் ஹட்டனில் மூன்று நிகழ்ச்சிகளை நடாத்தி சர்வதேச மகளிர் தினம் நினைவு கூரப்பட்டது. தற்போது நடை பெறும் தாபரிப்பு வழக்குகளின் எண்ணிக்கைகளின்படி இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு பெண்கள் மற்றும் சிறுவர்களில் முக்கிய கவனம் செலுத்துவது புலப்படுகிறது. பெண்கள் இடைக்கால உத்தரவு பெறுவதன் மூலம் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளும் குடும்ப வன்முறை வழக்குகள் மற்றொரு பிரிவாகும்

- **மறியற்காரர் உரிமைகள் பிரிவு**

தடுத்துவைக்கப்பட்டுள்ள மறியற்காரர்களின் உறவினர்கள் சட்ட உதவி தேவைப்படின் ஏதாவதொரு சட்ட உதவி நிலையத்தை நாடி உதவியைப்பெறலாம். பெரும்பாலும் மறியற்சாலை திணைக்களத்தின் அலுவலர்கள் வழக்குகளை சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அனுப்புகிறனர்.

- **விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிமைகள் பிரிவு**

இப்பிரிவின் பிரதான நோக்கம் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதாகும். இதற்கான நடைமுறை பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டைத் தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதற்காக குடியியல் வழக்கொன்றை சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் பதிவுசெய்வதாகும். பணம் மீளப்பெறுவது சம்பந்தமான எல்லா நீதிமன்ற நட்டஈட்டு வழக்குகளும் இரண்டு வருடத்திற்குள் காலவிதிப்பு செய்யப்படுவதால் தாமதம் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டஈட்டிற்கான குடியியல் வழக்குகள் நிலுவையிலுள்ள அதேவேளை காப்புறுதி குறைகேள் அதிகாரியின் ஆதரவுடன் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. நீண்ட நீதிமன்ற நடைமுறைக்குப் பதிலாக உடன்பாடு ஒன்றின் மூலம் தீர்வினை எட்டுவது இதன் நோக்கமாகும். தற்பொழுது அத்தகைய பல வழக்குகள் காப்புறுதி குறைகேள் அதிகாரியின் கீழ் கலந்துரையாடப்படுகின்றன. 2014 டிசம்பர் 31 இல் நாடுபூராவும் 775 விபத்து வழக்குகள் நிலுவையிலுள்ளன.

- **மனித உரிமை பணியகம்**

இப் பிரிவின் பணியானது அரச அலுவலர்களினால் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாக அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்தலை வலியுறுத்துவதாகும்..

- **முதியோர் உரிமை பிரிவு**

முதியோர்கள் சமூகத்தில் அதிக கவனிப்புக்கு உள்ளாக வேண்டியதொரு மக்கள் கூட்டம் என்பதை உணர்ந்து சட்ட உதவி ஆணைக்குழு இவ்வாறான நபர்களை இலக்காகக் கொண்டு பல நிகழ்ச்சிகளை அமுல்படுத்துகிறது. முதியோர்கள் தொடர்பான முறைப்பாடுகள் சட்ட உதவி நிலையங்களின் ஊடாக தீர்ப்பதற்கு தவறும் சந்தர்ப்பங்களில் அவை முதியோர் பராமரிப்பு சபையிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

- **தொழிலாளர் உரிமைகள் பிரிவு**

சட்ட உதவி நிலையங்கள் மற்றும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் உள்ள சட்ட உதவி அலுவலர்கள் நாடுபூராவுமுள்ள தொழில் நியாய சபைகளில் மனுதாரர் சார்பாக ஆஜராகின்றனர். 2014 டிசம்பர் 31 இல் நாடுபூராவுமுள்ள தொழில் நியாய சபைகளில் 258 மனுக்கள் நிலுவையிலுள்ளன

**விசேட கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்**

- **துணைச் சட்ட நிகழ்ச்சித்திட்டம்**

சட்ட உதவி ஆணைக்குழு விரிவான ஒரு துணைச் சட்ட சான்றிதழ் கற்கை நெறியொன்றை ஆரம்பித்தது. இக் கற்கைநெறி சட்டம் சம்பந்தமான சூழலில் பணிபுரியம் சட்ட உதவி ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக 2011 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் அவர்கள் தமது பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றலைமேம்படுத்துவதாகும். இந்நிகழ்ச்சித்திட்டம் நீதிமன்ற அலுவலர்கள், மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கள உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக அரச அலுவலர்களுக்கும் தனியார் துறை ஆளணியினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை ஏழு துணைச் சட்ட நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

- **சட்டத்தரணிகள் - பயிலுநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

ஒரு வருடத்தில் இரணட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது ஒரு சுய நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டமாகும். இதில் பங்குபற்றுபவர்களிடமிருந்து மண்டபக் கட்டணம், பாடநெறிக்கான நூல் தயாரித்தல் போன்ற பிரதான செலவுகளை ஈடுசெய்யும்பொருட்டு பெயரளவு தொகை ஒன்று அறவிடப்படுகிறது.

- **யூஎஸ்எய்ட்ஸ் (USAIDS) இனால் நிதியுதவியளிக்கப்படும் கருத்திட்டம்**

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்கா முகவர் நிறுவனத்தினால் (யூ.எஸ்.எய்ட்) நிதியுதவியளிக்கப்படும் சட்டத்தின் ஆட்சிக்கான சிவில் சமூகத்தின் முயற்சிகள் நிகழ்ச்சித்திட்டம் (சீ.எஸ்.எல்.ஆர்.ஓ.எல்) சட்ட உதவி ஆணைக்கிழுவின் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது

- **சட்ட உதவி ஆணைக்கிழுவின் சட்ட அலுவலர்களுக்கான பயிற்சி மற்றும் ஆண்டு மிளாய்வுக் கூட்டம்**

  சட்ட உதவி ஆணைக்குழு தனது சட்ட அலுவலர்களுக்கான வருடாந்த பயிற்சி மற்றும் மீளாய்வுக் கூட்டத்தை 2014 ஏப்ரல் 5-7 திகதிகளில் நடாத்தியது. சட்ட உதவி ஆணைக்குழுவின் 76 நிலையங்களிலிருந்து ஏறக்குறைய 120 சட்ட அலுவலர்கள் இப் பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.
- சட்ட உதவி ஆணைக்குழுவின் நிறுவன மற்றும் மனிதத் திறன் விருத்தி
- தெற்கு மற்றும் மேற்கு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்கும் பிரிவினை அமைத்தல்.

- சட்ட அலுவலர்களின் நீதிமன்ற திறன் பயிற்சித் திட்டம்
- சட்ட உரிமைகளும் புலம்பெயர்வும் பொது விழிப்புணர்வு பிரச்சாரம்
  புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை இலக்காக கொண்டு சட்ட உதவி ஆணைக்கிழுவின் சட்ட அலுவலர்களால் நடாத்தப்பட்ட 16 சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சீ.எஸ்.எல்.ஆர்.ஓ.எல். ஆதரவளித்தது.
- பதினாறு (16) நாட்கள் நடவடிக்கைப் பிரச்சாரம்.
- உலக எய்ட்ஸ் தினம்
- சட்ட அலுவலர்களின் உப ஆண்டு மாநாடு மற்றும் பயிற்சி - டிசம்பர் 2014
- CSI.ROL ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் டிசம்பர் 20-22 இல் நடந்த இரண்டாவது உப ஆண்டு மாநாடு மற்றும் பயிற்சிக்கு சீ.எஸ்.எல்.ஆர்.ஓ.எல். அனுசரணை வழங்கியது

- **பிஸ் ஸ்ரீலங்கா (BIZ Sri Lanka) நிதி அளிப்புக் கருத்திட்டம்**
  - **தோட்டத்தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

  நவம்பர் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் முறையே நுவரெலியா பெட்ரோ தோட்டம் மற்றும் பதுளை (பசறை) யூரி தோட்டம் ஆகிய இடங்களில் நடை பெற்ற இரண்டு விழிப்புணர்வு திட்டங்களுக்கு ஜீ.ரீ. இசட். (GTZ) நிறுவனத்தினால் சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு நிதிரீதியாக ஆதரவு அளிக்கப்பட்டது

- **ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம்**

  2014 ஆம் அண்டின் யூ.என.டீ.பி திட்டம் கொழும்பில் சிறுவர் உரிமைகள் திட்டங்களிலும் வடக்கில் சிறைச்சாலைகள் திட்ட கவனம் செலுத்தியது.

  சிறைச்சாலைகள் நிகழ்ச்சித் திட்டம் சிறைச்சாலை கருத்திட்டத்திற்குப் பொறுப்பான சட்ட அலுவலரினால் நடாத்தப்பட்டது. அவர் வெலிக்கடை சிறைச்சாலையில் 10 நிகழ்ச்சிளை மேற்பார்வை செய்து நடாத்தினார்.

  **சிறுவர் உரிமைகள் தினத்தை அனுஸ்டித்தல்**

  சிறுவர் தினத்தை அக்டோபர் 2014 இல் முல்லைத்தீவில் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் அனுஸ்டிக்கப்பட்டது.

- **ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியுதவி அளிக்கப்படும் கருத்திட்டம்**

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிஸ் தூதரகத்திளால் நிதியுதவி அளிக்கப்படும் சமூகநலத் திட்டங்கள், சட்ட நிவாரண நிலையங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்.

| நிலையம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | நிலையம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | 47 | யாழ்ப்பாணம் | 79 |
| பொலன்னறுவை | 26 | மன்னார் | 46 |
| மூதூர் | 33 | பொத்துவில் | 41 |
| கிளிநொச்சி | 60 | வவுனியா | 185 |
| திருகோணமலை | 90 | முல்லைத்தீவு | 57 |

**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 133,000,000 | 133,000,000 |
| மூலதன செலவினம் | 24,000,000 | 15,750,000 |
| **மொத்தம்** | **157,000,000** | **148,750,000** |

## 6.5 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

மத்தியஸ்த சபைகள் 1988ம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டன. இச் சட்டம் வழக்காடுவதற்கு மாற்றீடாகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கானதொரு மாற்று வழிமுறையை வழங்குகிறது. தமது வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் மக்கள் தமது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சட்ட நடவடிக்கைகளை நாடும் போக்கு தற்போது அதிகரித்து வருகிறது. இந் நடைமுறையில் வழக்காடுவோர் தேவையற்ற செலவுகளை செய்யவேண்டியுள்ளதுடன் நீண்ட காலதாமதத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் பாதிப்புற்ற தரப்பினர் மனவாட்டமடைகின்றனர்.

நாடுபூராகவுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் 328 மத்தியஸ்தர் குழாங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அண்ணளவாக 8,200 மத்தியஸ்தர்கள் மத்தியஸ்த சபைகளில் சேவையாற்றுகின்றனர். மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது அதிமேதகு சனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்படும் 5 அங்கத்தவர்ளைக் கொண்டுள்ளது. மத்தியஸ்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், நீக்குதல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற அதிகாரங்களை இம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது.

மத்தியஸ்த செயற்பாட்டின் மூலம் இரு திறத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்காக மூன்றாம் திறத்தவராக மத்தியஸ்தர்கள் செயற்படுகின்றனர்.


தமது பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இலகுவானதொரு பொறிமுறையாக சமுதாயத்தினால் மத்தியஸ்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின் மத்தியஸ்தத்தை அணுகும் போக்கு உயர்ந்துள்ளது. அதனால் ஆண்டுதோறும் இலட்சத்திற்கு மேற்பட்ட பிணக்குகள் மத்தியஸ்த சபைகளிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை**

| | பிணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகள் | 210,535 |
| தீர்க்கப்பட்ட பிணக்குகள் | 94,967 |
| சத வீதம் | 49% |

- டிசம்பர் 31ம் திகதி வரை 5 ஐந்துநாள் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டு 2,250 மத்தியஸ்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்
- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களினால் சமூக மத்தியஸ்தம், பாடசாலை மத்தியஸ்தம் மற்றும் ஏனைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்பட்டன. அவர்கள் 62 ஒருநாள் நிகழ்ச்சிகளையும், 06 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும், 75 ஐந்துநாள் நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளார்கள்.

**மத்தியஸ்த சபைகளினால் பெறப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை (மாகாணரீதியாக)**
**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை**




**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 232,350,944 | 227,478,152 |
| மூலதன செலவினம் | 1,700,000 | 1,424,885 |
| **மொத்தம்** | **234,050,944** | **228,903,036** |

## 6.6 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை

**நோக்கு**

நாட்டில் சிறப்பாக முகாமை செய்யப்படுகின்ற நியதிச்சட்ட சபையாக மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச்சபையை அபிவிருத்தி செய்வதாகும்.

**செயற்பணிகள்**

நீதி மற்றும் சட்ட தொழில்துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் தற்போதிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துகின்றமையால் அவற்றைப் பராமரித்து மேலும் விருத்தி செய்து அவர்களுக்கேற்ற சூழலை வழங்கலாம் என்பதோடு அது அவர்கள் சேவை வழங்கக்கூடிய வழக்குத் தொடுனர்கள், மற்றும் அத்துடன் தொடர்புடயவர்களுக்கு செயற்திறனானதும், நியாயமானதும் நீதியானதுமான சேவையை வழங்கும் நோக்கத்தோடு அவர்களின் செயற்பாடுகளைப் புரிவதற்கும் உதவியாக இருக்கும் என்பதோடு அதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளல்.

1987ம் ஆண்டின் 50ம் இலக்க மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை சட்டத்தின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியையும் அதன் கட்டிடங்ளையும் பரிபாலித்து கட்டுக்கோப்போடு நிர்வகித்து பராமரித்து மேலும் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்படுமிடத்து

உரிய மாற்றங்களையும், சீர் திருத்தங்களையும் மேலதிக மாற்றங்களையும் செய்யும் நோக்கில் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை ஏற்படுத்தப்பட்டது.

நிர்வாக சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

- கௌரவ பிரதம நீதியரசர்
- கௌரவ பிரதம நீதியரசரினால் நியமனஞ் செய்யப்படும் உயர் நீதிமன்ற நீதியரசரொருவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரால் நியமனஞ் செய்யப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரொருவர்
- நீதிஅமைச்சின் செயலாளர்
- உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டிட நிர்மாண அமைச்சின் செயலாளர்
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்
- கொழும்பு மாநகரசபை ஆணையாளர்
- நிதி அமைச்சரின் பிரதிநிதி
- அதிமேதகு இலங்கை சனாதிபதியால் நியமிக்கப்படும் இரு அங்கத்தவர்கள்.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

- உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை பராமரித்தல், பாதுகாப்பு சேவையினைப் பராமரித்தல் மற்றும் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலத்திற்குப் பாதுகாப்பு சேவையினை வழங்குதல்.
- நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலம் மற்றும் அலுவலர்களின் விடுதிகளில் திருத்த வேலைகளை மேற்கொள்ளல்.
- நீதி அமைச்சின் அலுமினிய ஜன்னல்கள் மற்றும் கதவுகள் பதிலீடு செய்யப்பட்டுள்ளன.
- வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமான விபரங்களை பொதுமக்கள் பார்வையிடுவதற்காக 11 பானாசோனிக் எல்.இ.டி. தொலைக்காட்சிகள் கொள்வனவு செய்யப்பட்டு உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் பொருத்தப்பட்டுள்ளன.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 134,000,000 | 124,780,000 |
| மூலதன செலவினம் | 70,000,000 | 17,700,000 |
| **மொத்தம்** | **204,000,000** | **142,480,000** |

# 07 நீதிமன்றங்கள்

இவ் அமைச்சின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளில் பின்வரும் நீதிமன்றங்கள் உள்ளடங்குகின்றன.

- *உயர் நீதிமன்றம்*
- *மேன்முறையீட்டு நீதிமன்றம்*
- *மேல் நீதிமன்றங்கள்*
- *மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்*
- *மாவட்ட நீதிமன்றங்கள்*
- *நீதிவான் நீதிமன்றங்கள்*
- *தொழில் நியாய சபைகள்*
- *காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்*

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், 20 மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், வர்த்தக மேல் நீதிமன்றம், 31 மேல் நீதிமன்றங்கள், 40 மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், 41 மாவட்ட நீதிமன்றங்கள், 57 நீதிவான் நீதிமன்றங்கள், 2 சிறுவர் நீதிவான் நீதிமன்றங்கள் 25 சுற்று நீதிவான் நீதிமன்றங்கள், 37 தொழில் நியாய சபைகள் 65 காதி நீதிமன்றங்கள் மற்றும் ஒரு காதி மேன்முறையீட்டு சபை தொடர்பிலான கணக்குப் பொறுப்புக்கள் அமைச்சினால் கையாளப்படுகின்றன. செலவினங்கள் 25 மேல் நீதிமன்ற கணக்கீட்டு நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 11 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய நியாயாதிக்கம்
- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

உயர் நீதிமன்றம் அதன் செயல்பாடுகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உதவுகிறது. இதற்கான நிதியை நீதி அமைச்சு செலவினத்தலைப்பு 234 இன் மூலம் வழங்குகிறது. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பணிகளாவன:

- உயர் நீதிமன்றப் பதிவுகளைப் பராமரித்தல்.
- அமர்வுகள் மற்றும் விண்ணப்ப அட்டவணைகளை ஒழுங்கு செய்தல்.
- நீதிமன்ற உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் பதிவு செய்தல்.
- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளை அனுமதித்தல்
- மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் வழக்கேடுகளைத் தயாரித்தலும் சட்ட செலவுகளை மதிப்பீடு செய்தலும்.

**2014.01.01 தொடக்கம் 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| வகை | 2013/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2014/12/31 இல் உள்ள பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2014/08/31 இல் உள்ள மொத்த வழக்குகள் | அனுமதியளிக்கப்பட்ட வழக்குகள் | 2014/12/31 இல் முடித்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் | 2014/12/31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் | 817 | 369 | 1,186 | -- | 448 | 738 |
| விசேட அனுமதி விண்ணப்பங்கள் | 379 | 261 | 640 | 74 | 230 | 336 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | -- | 05 | 05 | -- | 05 | -- |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 368 | 199 | 567 | -- | 211 | 356 |
| உ.நீ வ.மே.நீ மேன்முறையீடு | 257 | 88 | 345 | -- | 121 | 224 |
| மேல்நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 153 | 80 | 233 | 13 | 74 | 146 |
| ஆணை விண்ணப்பங்கள் | 01 | 02 | 03 | -- | 01 | 02 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 1,103 | 686 | 1,789 | 155 | 458 | 1,176 |
| மீளாய்வு வழக்குகள் | -- | 07 | 07 | -- | 02 | 05 |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | 01 | -- | 01 | -- | **--** | **01** |
| ஏனைய | 06 | 04 | 10 | -- | 01 | 09 |
| TAB APPEL | 01 | 01 | 02 | -- | 02 | -- |
| SC Special | 07 | 08 | 15 | -- | 02 | 13 |
| **மொத்தம்** | **3,093** | **1,710** | **4,803** | **242** | **1,555** | **3,006** |

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 69,090,000 | 58,676,877 |
| மூலதன செலவினம் | 8,100,000 | 3,328,726 |
| **மொத்தம்** | **77,190,000** | **60,005,603** |

## 7.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

**2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை**

| வழக்கு வகை | 2014/01/01 இல் நிலுவையிலுள்ளவை | பதிவு செய்யப் பட்டவை | முடிவெடுக்கப் பட்டவை | 2014/12/31 இல் நிலுவையிலுள்ளவை |
|---|---|---|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 1,135 | 416 | 348 | 1,200 |
| உயர்நீதிமன்ற மேன்முறையீடுகள் | 813<br>04 | 283<br>-- | 241<br>02 | 855<br>02 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 1,224 | 200 | 307 | 1,117 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 1,379 | -- | 398 | 981 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 285 | 156 | 159 | 282 |
| மீளாய்வு (குடியியல்) மற்றும் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 113 | 20 | 49 | 84 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 82 | 90 | 33 | 139 |
| **மொத்தம்** | **5.035** | **1,165** | **1,537** | **4,663** |

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம் (234-01-02)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 48,020,000 | 43,012,258 |
| மூலதன செலவினம் | 1,200,000 | 130,633 |
| **மொத்தம்** | **49,220,000** | **43,142,891** |

## 7.3 தொழில் நியாயசபை செயலாளர் அலுவலகம்

தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகம் இல, 428/11 A, டென்சில் கொபேகடுவ மாவத்தை பத்தரமுல்லயில் உள்ள நீதி அமைச்சின் கட்டிடத்தில் அமைந்துள்ளது.

1957ம் ஆண்டின் 62ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்படும் பிணக்குகளை விசாரித்து கையுதிர்வு செய்தல் தொழில் நியாய சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அரசு அல்லாத நிறுவனங்களில் ஊழியர்களை வெளியேற்றுதல், போன்ற சம்வங்களின்போது நீதியை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமென தொழில் நியாய சபையை வரையறை செய்யலாம் என்பதுடன் இது அத்தகைய திறத்தினருக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். தொழில் நியாய சபை தலைமை அலுவலகத்தின் கீழ் 37 தொழில் நியாயசபைகள் செயற்படுகின்றன. அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு - 06 | கண்டி - 01 | அவிஸாவளை - 01 | பலாபத்வெல - 01 |
| இரத்மலானை - 01 | நாவலப்பிட்டிய - 01 | கடுவெல - 01 | மகரகம - 01 |
| ஹற்றன் - 01 | தலவாக்கலை - 01 | வத்தளை - 01 | நுவரெலியா - 01 |
| கம்பஹா - 01 | பதுளை - 01 | நீர்கொழும்பு - 02 | பண்டாரவளை - 01 |
| பாணந்துறை - 01 | அம்பாறை - 01 | களுத்துறை - 01 | மட்டக்களப்பு - 01 |
| காலி - 01 | திருகோணமலை - 01 | மாத்தறை - 01 | சிலாபம் - 01 |
| கொட்டபொல - 01 | அனுராதபுரம் - 01 | இரத்தினபுரி - 01 | குளியாபிட்டிய - 01 |
| கேகாலை - 01 | பலாங்கொடை - 01 | குருநாகல் - 01 | |

தொழில் நியாய சபைகளைப் பேணுவதற்குத் தேவையான மனிதவளங்கள், கூட்டு வளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை வழங்குதலும் முகாமைசெய்தலும் தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகத்தின் பிரதான பணிகளாகும். அதன்பிரகாரம் தொழில் நியாய சபை தவிசாளர்கள் தவிர்ந்த ஏனைய எல்லா அலுவலர்களினதும் தாபன மற்றும் நிருவாக பணிகள் மற்றும் தொழில் நியாய சபை தவிசாளர்கள் உட்பட எல்லா அலுவலர்களினதும் வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உட்பட எல்லா நிதி முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டுப் பணிகளும் தொழில் நியாய சபைகள் தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான முன்னேற்றம்**

| 2014.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2014.01.01தொடக்கம் 2014.12.31 வரை | | 2014.12.31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் | |
| 5,431 | 2,320 | 2,933 | 4,818 |

**அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள்**

| பதவி | எண்ணிக்கை | விடயம் |
|---|---|---|
| அலுவலக உதவியாளர் | 4 | புத்தகம் கட்டுதல் |
| முகாமைத்துவ உதவியாளர் | 3 | தமிழ் மொழி |
| | 3 | அடிப்படை தமிழ் |
| | 1 | அடிப்படை ஆங்கிலம் |

| | | |
|---|---|---|
| | 1 | கணனி |
| தொழில் நியாய சபைகளின் அலுவலர்கள் | 315 | உற்பத்தித்திறன் கோட்பாடு |
| சுருக்கெழுத்தாளர் | 46 | அறிமுக நிகழ்ச்சி |
| கணக்காளர் | 1 | ஐ.ஈ.எல்.ரி.எஸ். |

- 62 சுருக்கெழுத்தாளர் தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடையே நடாத்தப்பட்ட எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சைகளில் பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2014.07.14 ம் திகதி அமுலுக்கு வரும்வகையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.
- தெழில் நியாய சபைகளில் பணிபுரிகின்ற சகல அலுவலர்களையும் மேவும் வகையில் 3 உற்பத்தித்திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வார இறுதியில் நடாத்தப்பட்டன. அதன் அனுபவம் மற்றும் அறிவு தொழில்நியாய சபைகளின் உற்பத்தித்திறனை விருத்தி செய்யவும்,தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி தேவையான அறிவுரைகளைப் பெற்று அந்நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகளில் கலந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும்.
- தேசத்திற'கு மகுடம் 2014 நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமான நீதி அமைச்சினால் நீதிமன்ற வலயங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உற்பத்தித்திறன் விருதுப் போட்டித் தொடர்களில் குருணாகல் தொழில் நியாயசபை சிறந்த உத்பத்தித்திறனுக்கான விருதைப் பெற்றதுடன் குளியாப்பிட்டிய தொழில்நியாயசபை சிறந்த முறையில் அலுவலக முறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்தியமைக்கான விருதைப் பெற்றது.
- தொழில் நியாய சபைகளுக்காக 30 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

**(228-01-02)**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 233,550,000 | 233,256,858 |
| மூலதன செலவினம் | 15,116,000 | 12,530,453 |
| **மொத்தம்** | **248,666,000** | **245,787,311** |

# 8 தொடர்புடைய நிறுவனங்கள்

## 8.1 இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

இலங்கை நீதிபதிகள் நிறுவனமானது 1985ம் ஆண்டு 46ம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படும் இரு உயர்நீதிமன்ற நீதியரசர்களை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களைக்கொண்ட முகாமையாளர் சபையினால் நிருவகிக்கப்படுகிறது. இந் நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள் அமைச்சினால் ஒதுக்கப்படுகிறது. .

**விடயங்களும் பணிகளும்**

I. நீதித்துறை அலுவலர்களுக்கு நீதித்துறை மற்றும் சட்டம் சம்பந்தமாக தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு வசதி செய்தல்.
II. நீதித்துறை அலுவலர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கும் தமது அறிவையும் திறமைகளையும் விருத்திசெய்வதற்கும் கூட்டங்கள், மகாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.
III. நீதி நிருவாகம் சம்பந்தமான பலதரப்பட்ட விடயங்களில் ஆராய்ச்சிப் பாடநெறிகளை நடாத்துவதுடன் நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் கல்வி சம்பந்தமான பொருட்களை வழங்குதல்.

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | ஒதுக்கம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 19,033,000 | 19,032,865 |
| மூலதன செலவினம் | 7,000,000 | 686,000 |
| **மொத்தம்** | **26,033,000** | **19,718,865** |

**2014.01.01 முதல் 2014.12.31 வரையான முன்னேற்றம்**

1. புதிதாக நியமனமபெற்ற நீதித்துறை அலுவலர்களுக்காக 97 பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன.
2. "நிதி முறைமையின் ஸ்திரத்தன்மை, மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு பணிகள்" என்னும் தொனிப்பொருளில் விருந்தினர் விரிவுரையொன்று 2014.01.31 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
3. வழக்கு முகாமைத்துவத்தின் தற்கால போக்குகள் மற்றும் சமகால நீதிமன்ற நடைமுறை என்னும் தொனிப்பொருளில் ஐக்கிய அமேரிக்க நாடுகளின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட நீதிபதியும் பிரதம நீதிபதியுமான கௌரவ நீதியரசர் ஜோன் கிளிபாட் வொலஸ் அவர்களால் விருந்தினர் விரிவுரையொன்று நடாத்தப்பட்டது. அதில் 145 நீதிபதிகள் கலந்துகொண்டனர்.
4. "பயனுறுதியான வழக்கு முகாமைத்துவத்திற்கான தற்கால நடைமுறைகள் மற்றும் சட்டத்தின் தாமதங்களைத் தவிர்த்தல்" என்னும் தொனிப்பொருளில் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான தங்குமிட செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.
5. ஐக்கிய அமேரிக்க நாடுகளின் நெவாடா மாவட்டத்தின் மாவட்ட நீதிபதி ரொகர் எல். ஹன்ட் அவர்களால் "வழக்கு முகாமைத்துவம்" என்னும் தொனிப்பொருளின் கீழ் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 138 நீதிபதிகள் கலந்துகொண்டனர்

6. தெற்கு, வடமத்திய, மத்திய மற்றும் வட மாகாணங்களின் நீதிபதிகளுக்கான "வழக்கு முகாமைத்துவம் மற்றும் மத்தியஸ்தம்" பற்றிய தங்குமிட செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது
7. கண்டி நீதிமன்றத் தொகுதியின் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் கிழக்குமாகாணத்தின் மாவட்ட நீதிபதிகள் ஆகியோருக்காக "வழக்கு முகாமைத்துவம் மற்றும் மத்தியஸ்தம்" பற்றிய ஒரு நாள் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.
8. கௌரவ நீதியரசர் ஜே.எப்.ஏ.சோசா ஞாபகார்த்த சொற்பொழிவு நடாத்தப்பட்டதுடன் நீதிபதிகளின் பத்திரிகை iii ஆம் தொகுதி 2014 மே மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.
9. நிதிபதிகளின் பாவனைக்காக "மனுபுத்திர சட்ட தரவுத்தளம்" இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் தாபிக்கப்பட்டது.
10. நீதிபதிகளின் பாவனைக்கான புதிய சட்ட நூல்கள் நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டன.
11. பின்வரும் பணியாட் தொகுதியினர் ஆட் சேர்ப்புச் செய்யப்பட்டனர்,

| | |
|---|---|
| அலுவலக உதவியாளர் (ஒப்பந்த அடிப்டையில்) | 02 |
| வீட்டுக்காப்பாளர் (ஒப்பந்த அடிப்டையில்) | 01 |
| நுலகர் (நிரந்தரம்) | 01 |
| உதவி கணக்காளர் (நிரந்தரம்) | 01 |

12. ஏ.ஆர்.பி. அமரசிங்க அவர்களால் எழுதப்பட்ட நீதித்துறை ஒழுக்க நெறிகள் என்ற நூலின் 52 பிரதிகளை கொள்வனவு செய்து நீதிபதிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.
13. விடய ஆய்வு, குழுக்கலந்துரையாடல்கள் போன்ற புதிய உத்திகளை அறிமுகம் செய்து தொடர்ச்சியான சட்டத்துறை கல்வியின் அங்கமாக நீதித்துறை அலுவலர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாயசபைத் தவிசாளர்கள் ஆகியோருக்காக சனிக்கிழமைகளில் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடாத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதன்படி 321 உயர் நீதிமன்ற நீதிபதிகள், 4822 நீதித்துறை அலுவலர்கள், 118 தொழில் நியாய சபை தவிசாளர்கள் மற்றும் 57 காதி நீதிமன்றத் தலைவர்களின் பங்குபற்றலுடன் 18 சனிக்கிழமை கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.
14. மின் நூலகம் ஒன்று தொடங்கப்பட்டது

**நீதிபதிகளுக்கான வெளிநாட்டுப் பயிற்சி**

| பயிற்சி நெறியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | நீதிபதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நீதித்துறை ஒழுக்க நெறிகள் மற்றும் பயனுறுதியான வழக்கு முகாமைத்துவம் | நீதித்துறை பயிற்சி நிலையம்- மலேசியா | 80 |
| நீதித்துறை சீர்திருத்தங்கள் & சிறப்புத்தன்மை - சிங்கப்பூர் அனுபவம் | சிவில் சேவை கல்லூரி - சிங்கப்பூர் | 25 |
| வழக்கு முகாமைத்துவம், குடியியல் சட்ட மறுசீரமைப்பு மற்றும் குடும்ப சட்ட மறுசீரமைப்பு | நீதித்துறை அகாடமி - தில்லி | 40 |

## 8.2 இலங்கை சட்டக்கல்லூரி

1990ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டக்கல்வி பேரவை கட்டளை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டக்கல்வி பேரவையானது இலங்கை சட்டக்கல்லூரியின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவுள்ளது. இக் கல்லூரி நீதி அமைச்சரின் இணக்கத்துடன் பேரவையினால் ஆக்கப்படுகின்ற சட்டக்கல்விப் பேரவை விதிகளின்படி தொழிற்படுகிறது. மேன்மைதங்கிய பிரதம நீதியரசர் பேரவையின் தவிசாளராக இருப்பதுடன் பெயர் குறித்துரைக்கப்பட்ட/ நியமிக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் (பிரதம நீதியரசர், நீதி அமைச்சர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியோரின் பிரதிநிதிகள்) பதவிவழி உறுப்பினர்கள் 3 பேரையும் (சட்டமா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், சொலிஸிட்டர் ஜெனரல்) இச்சபை உள்ளடக்கியுள்ளது.

சட்டக்கல்லூரி $3^1/_2$ வருட கற்கை நெறியொன்றினை நடாத்துகிறது. இக் கற்கைநெறியின் இறுதியில் சட்டத்தரணியாக அனுமதித்துக்கொள்வதற்கான இறுதிப் பரீட்சை நடைபெறும். பின்னர் அப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளை சட்டத்தரணியாக ஆட்சேர்ப்பு செய்வதற்காக உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் நடைமுறை பயிற்சி கற்கை நெறியொன்றினை கற்பதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தில் ஆகக்குறைந்தது 8 வருடங்கள் உள்ள சிரேஸ்ட சட்டத்தரணியொருவரின்கீழ் 6 மாதகால பயிற்சியை பின்பற்ற வேண்டும்.

இந் நிறுவனம் சுய நிதியளிப்பு நிறுவனமாக இயங்குகிறது. சட்டத்தொழிலில் நல்ல தரமான அனுபவமுள்ள வளவாளர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

- சட்டக்கல்லூரியின் அலுவல்களை மேலும் வினைத்திறமையாக்கப்பட்டு தரத்தை உயர்த்துவதற்காக பரீட்சை பணிப்பாளர் ஒருவரின் கீழ் சுயாதீன பரீட்சைப் பிரிவொன்றை தாபித்து உள்ளக சட்ட பரீட்சைகள் அனைத்தையும் அதனூடாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி 2014 ஏப்ரல் பரீட்சைக்குத் தோற்றிய 872 மாணவர்களுக்கு பரீட்சை நடாத்துதல் மற்றும் சட்டக்கல்லூரியினுள்ளே விடைத்தாள்களை பரிசோதனை செய்வதனூடாக பெறுபேறுகளின் வெளிப்படைத் தன்மையை பாதுகாப்பதற்கு மேலதிகமாக பெறுபேறுகளை துரிதமாக வழங்கக்கூடியதாகவுமுள்ளது.
- 2014.01.01 ஆம் திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு 436 சட்ட மாணவர்கள் (இலங்கை சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை மற்றும் எல்.எல்.பீ. சட்ட மாணவர்கள்) கற்கை நெறிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கான கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.
- 2015அம் ஆண்டிற்கு சட்ட மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்காக பரீட்சை ஆணையாளரால் போட்டிப் பரீட்சை யோன்று 2014.09.06 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதில் 3471 பரீட்சார்திகள் தோற்றினர். அவர்களில் 214போர் கல்வியாண்டின் அனுமதிக்காகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பகுதி II

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆந் திகதிய 1909/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பின்வரும் திணைகளங்களும் நிறுவனங்கள்ளும் நீதிஅமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

1. சட்டமா அதிபர் திணைக்களம்
2. சட்டவரைஞர் திணைக்களம்
3. சிறைச்சாலைகள் திணைக்களம்
4. சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்
5. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

அதன் பிரகாரம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு உள்ளடங்கலாக மேற்கூறப்பட்ட திணைக்களங்களின் 2014ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை பின்வருமாறு:

## 9. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

**2014 இல் அடையப்பெற்ற இலக்குகள்**

1. **கைதிகள் இடநெருக்கடியைக் குறைத்தல்**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போது இடநெருக்கடியைக் குறைத்தல் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டதோடு கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1.1 **சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றுதல்**

மிக உயர் பொருளாதாரப் பெறுமதி மிக்க நகர மத்தியில் அமைக்கப்படிருக்கும் சிறைச்சாலைகளை நகரத்துக்கு வெளியே மிகவும் இட வசதி உள்ள பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்தல் அமைச்சின் கொள்கையாகும். அதற்கமைய போகம்பரைச் சிறைச்சாலையைப் பல்லேகலைக்கு (தும்பறை) மாற்றம் செய்வதை 03 கட்டங்களில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இரண்டாம் கட்ட வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.



அவ்வாறே தங்காலைச் சிறைச்சாலை அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துடன், இரண்டு வாடகைக் கட்டிடங்களில் மிகவும் வசதி குறைந்த நிலையில் 400 கைதிகளுடன் தற்போது இயங்கிவரும் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்குப் பதிலான புதிய சிறைச்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், காலி, நீர்கொழும்பு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளை வேறிடங்களுக்கு மாற்றுவது தொடர்பில் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 **சமுதாயஞ்சார் சீர்திருத்த முறைமையை வலுப்படுத்தல்**

சிறைச்சாலைக்குள் நிலவும் இடநெருக்கடியைக் குறைப்பதற்கான மாற்றுவழியாக 02 ஆண்டுகளுக்குக் குறைவான சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றங்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படும் சமுதாயஞ்சார் சீர்திருத்த முறையை விரிவுபடுத்துவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் தேவையான மானிட மற்றும் பௌதிக ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுள்ளன.

2. **வினைத்திறன்கொண்ட சேவைக்காக நிர்வாகத்தை மறுசீரமைத்தல்**

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்களின் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல், புதிய பதவிகளை உருவாக்குதல் மற்றும் வினைத்திறனுடன் சேவையாற்றக்கூடிய மனித வளத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பயிற்சிளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டின் தயட்டகிருல தேசிய வேலைத்திட்டத்தினை அடிப்டையாக்கொண்டு மாத்தறை கொட்டவிலவத்தப் பிரதேசத்தில் வசதிகளுடனான பயிற்சி நிறுவமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3. கைதிகளின் புனர்வாழ்வைத் தரமுள்ளதாக அபிவிருத்தி செய்தல்

### *3.1 வட்டறக்க சிறைச்சாலைப் பாடசாலை*



சிறையில் அடைக்கப்பட்டதன் காரணமாகக் கல்வி வாய்ப்பை இழந்த சிறைக் கைதிகளுக்கு முறையான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காக வட்டறக்கவில் அமைந்துள்ள சிறைச்சாலையை மையமாகக் கொண்டு கல்வி அமைச்சின் நேரடித் தொடர்பில் வட்டறக்க சிறைச்சாலைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

3.2 விடுதலை நியமிக்கப்பட்ட மற்றும் வீட்டு விடுதலை பெறும் கைதிகளை நல்ல குடிமக்களாக சமூகமயப்படுத்தல் தொடர்பில் தனிநபர் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல்.

- இதன் கீழ் சிறைச்சாலை அலுவலர்கள் 100 பேரைப் பயிற்றுநர்களாகப் பயிற்சியளிக்கும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும், "**பௌத்த நெறி மூலம் வாழ்க்கையை மேம்படுத்தல்**" என்ற தொனிப் பொருளின் கீழ் 04 சிறைச்சாலைகளில் போதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4. கைதிகளின் குடும்ப நலனோம்பல், அபிவிருத்தி மற்றும் பிற்பொறுப்பான்மையை நடைமுறைப்படுத்தல்

மீண்டும் மீண்டும் சிறைக்குச் செல்வதே பிழைப்பாக இருப்பதையும், குற்றங்களுக்கு இட்டுச் செல்லும் தூண்டுதலைக் குறைக்கும் பொருட்டும் புனழ்வாழ்வு பெற்று சமூகத்தில் இணைந்த பின்னர் அவர்கள் தொடர்பில் பின்னைய நிலைமையை அறிந்துகொள்ளவும், அவர்கள் முகம்கொடுக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் உதவுதல் மூலம் நல்ல மனிதர்களாக வாழ்வதற்குத் தேவையான சமூக சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கவும், சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகளின் குடும்பங்களில் பொருளாதார, சமூக மற்றும் கல்வி நிலையை உயர்த்துவதற்கும் தேவையான வழிகாட்டலைச் செய்வதற்கும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் கீழ் இலங்கையிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 242 இற்கு அபிவிருத்தி அலுவலர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிறைக் குடும்பங்களில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புதல், தொழில் திறமையைப் பெற்றுக்கொடுத்தல், சுயதொழில் செய்வதில் ஈடுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## 5. சட்டத்திருத்தம்

இதன் அடிப்பிடயில் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டு நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்தோடு, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டமும் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 6. மதுவுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வுக்காகப் பொலன்னறுவை மாவட்டக் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைத்தல்

மதுவுக்கு அடிமையாகி உள்ளவர்களைச் சிறையில் அடைக்காது புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் செயற் பிரிவின் கீழ் உள்ள கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பிப் புனர்வாழ்வளித்தல் இடம் பெறுகின்றது.

மதுவுக்கு அடிமையானவர்களை மேலும் குற்றவாளிகளாக நோக்காது அவார்களின் பழக்கத்தை மாற்றி மிக நல்ல ஆளுமையுள்ள நபர்களாகச் சமூகமயப்படுத்தல் இதன் நோக்கமாகும். இதன்

பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் மூலம் சிறைச்சாலைகளிலுள்ள இடநெருக்கடிளைக் குறைக்க முடிந்துள்ளன.

7. **புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மிகவும் செயற்றிறன் உள்ளதாக ஆக்குவதற்காக அனைத்து அமைச்சுகளினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்**
பயனுறுதி மிக்க புனர்வாழ்வுச் செயற்பாட்டுக்காக அனைத்து அமைச்சுக்களின் ஒன்றிணைந்த வேலைத் திட்டத்தின் அவசியத்தை மையப்படுத்தி பல்வேறு அமைச்சுகளுடன் ஒன்றிணைந்த வேலைத் திட்டங்கள் இடம் பெறுகின்றன. அவ்வாறே, பல்வேறு அமைச்சுகளின் உதவியைப் பெற்றுத் தொழில் பயிற்சி, கலை, அழகியல், கல்வி மற்றும் அறிவுரைகள் போன்ற வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
உதாரணம் – கல்வி அமைச்சுடன் ஒன்றிணைந்து வட்டறக்க சிறைச்சாலை பாடசாலையை நடாத்திச் செல்லல்.

8. **சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்**
சிறைக் கைதிகள் தொடர்பான சகல கணினிமயப்படுத்தலினூடாகச் செயற்றிறன் கொண்ட பல்வேறு தகவலகளைப் பரிமாறிக் கொள்ளல், நிர்வாகம் செய்தல், பாதுகாப்பை முறைப்படுத்தல்.

**புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு**

| நிறுவனம் | செலவு விடயம் | 2014ஆம்ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி) | | | 2014.12.31திகதி வரை செலவு (ரூ.மி) | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு மதிப்பீடு | மேலதிக ஒதுக்கீடு பெற்றது | மொத்தம் | செலவு | ஒதுக்கீட்டு வீதம் |
| புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | மூலதனம் | 51.400 | | 51.400 | 46.279 | 90.04% |
| | மீண்டுவரும் செலவு | 118.580 | | 118.580 | 114.963 | 96.95% |
| | **மொத்தம்** | **169.980** | | **169.980** | **161.242** | |
| சிறைச்சாலைத் திணைக்களம் | மூலதனம் | 1110.500 | 484.796 | 1595.296 | 1424.439 | 89.29% |
| | மீண்டுவரும் செலவு | 3951.250 | 327.350 | 4278.600 | 4233.166 | 98.94% |
| | **மொத்தம்** | **5061.750** | **812.146** | **5873.896** | **5657.605** | |
| சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் | மூலதனம் | 6.700 | 6.400 | 13.100 | 12.750 | 97% |
| | மீண்டுவரும் செலவு | 79.650 | 120.970 | 200.620 | 162.020 | 81% |
| | **மொத்தம்** | **86.350** | **127.370** | **213.720** | **174.770** | |
| **முழு மொத்தம்** | மூலதனம் | 1168.6 | 491.196 | 1659.796 | 1483.468 | 89.38% |
| | மீண்டுவரும் செலவு | 4149.48 | 448.32 | 4597.8 | 4510.149 | 98.09% |
| | **மொத்தம்** | 5318.08 | 939.516 | 6257.596 | 5993.617 | |

❖ புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையபதிச் செயலக மற்றும் புனருத்தாபன அதிகாரசபையின் மூலதன மற்றும் மீண்டுவரும்செலவு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செலவினுள் உள்ளடக்கப்பட்படவில்லை.

## 9.1 சிறைச்சாலைகள் திணைக்களம்

பாதுகாப்பு, காத்தல் மற்றும் சீர்திருத்தல் ஆகிய பிரதான குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு 1905 ஆடி மாதம் 16 ஆம் திகதி திணைக்களமாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் அமைக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைவதன் பொருட்டு தீவு முழுவதும் தழுவும் 03 சிறைச்சாலைகளும், 20 தடுப்பு முகாங்களும், 10 தொழில் பாசறைகளும், 02 திறந்தவெளிச் சிறைச்சாலைகளும், 02 இளங் தவறாளர்களின் சீர்திருத்த மையங்களும், 01 சிறைச்சாலைப் பாடசலைலயையும் கொண்டதாக தற்போதைய சிறைச்சாலைகள் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

### 2014ஆம் ஆண்டு அடைய எதிர்பார்க்கப்படும் இலக்குகள்

01. சிறைச்சாலை இடநெருக்கடியை குறைப்பதற்காக நகரையண்டிய சிறைச்சாலைகளை இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
02. சேவை தேவைப்பாடுகளுக்கு அமைய பயிற்சி மற்றும் ஆய்வு வேலைத்திட்டங்ளை அபிவிருத்தி செய்தல் மூலம் நல்ல பரிட்சயமும், திருப்தியும் அளிக்கக்கூடிய பணியாளர்களை உருவாக்கல்.
03. சிறைக்கைதிகளை நாட்டின் உற்பத்திச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய தொழில் திறமைகள் கொண்ட சட்டத்தை மதிக்கும் பண்புள்ளவர்களாக ஆக்குதல்.
04. சிறைச்சாலையை சுய தேவையை நிறைவு செய்யக் கூடியவாறு கொண்டு வந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறையின் சிரமதான பங்களிப்பைச் செய்தல்.

### 2014 ஆம் ஆண்டு அடையப் பெற்ற இலக்குகள்

1. <u>சிறைச்சாலை இட நெருக்கடியைக் குறைத்தல்</u>

அதிக இடநெருக்கடி உள்ள சிறைச்சாலைகளில் கைதிகளை வகைப்படுத்தல், கைதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிளைப் பெற்றுக் கொடுத்தல் முதலானவற்றைச் செய்தல் சிரமமாக இருந்ததால் நகரத்துக்கு மத்தியில் இருந்த சிறைச்சாலையை நகரத்துக்கு வெளியே இடவசதி மிக்க இடங்களில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன

இத்திட்டத்தின் கீழ் கண்டி நகர மத்தியில் நிறுவப்பட்டிருந்த போகம்ரைச் சிறைச்சாலைக்குரிய காணியை 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 20 ஆம் திகதி அரசிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

#### 1.1. நகர மத்தியில் அமைந்திருந்த சிறைச்சாலையை நகரத்துக்கு வெளியே கொண்டு செல்லல்

I. கண்டி நகரத்தின் மத்தியில் அமைந்திருந்த போகம்பரைச் சிறைச்சாலையைப் பல்லேக்கலை (தும்பறை) புதிய சிறைச்சாலைக் கட்டிடத் தொகுதிக்குக் கொண்டு செல்லல்.

2013 ஆம் ஆண்டில் முதலாவது கட்டம் நிறைவு பெற்றது. அத்துடன் 2014 ஆம் ஆண்டில் இரண்டாவது கட்டத்துக்கு அமைய இதுவரைக்கும் ரூபா மில்லியன் 160 செலவு செய்து கீழ் வரும் நிர்மாணப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

- I பதவிநிலை ஜெயிலர் உத்தியோகபூர்வ வதிவிடம் 100%
- நீர் தாங்கி 52%
- விருந்தினர் மண்டபம் 100%
- பிரதான களஞ்சிய சாலை 44%
- சிறைச்சாலை மருத்துவ மனை 36%

II. **யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலைக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்**

ரூபா மில்லியன் 196 ஒதுக்கீடுசெய்து கட்டம் 1A இன் வேலைகள் முடிவடைந்துள்ளது. அதற்கு இந்த ஆண்டில் 87 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. 1B கட்டம் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் 25% வேலைகள் நிறைவடைந்துள்ளன.



III. ***அங்குணகொலப்பெலஸ்ஸ புதிய சிறைச்சாலைக் கட்டிடத்தொகுதி நிர்மாணித்தல்***

தற்போது 01¼ ஏக்கரில் அமைந்துள்ள தங்காலைச் சிறைச்சாலையை 65 ஏக்கர் பரப்பளவுகொண்ட அங்குணகொலப்பெலஸ்ஸ புதிய சிறைச்சாலைக் கட்டடத் தொகுதிக்கு மாற்றுவதற்கான நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 961 மில்லியன் ரூபா முற்பணமாகச் செலுத்தப்பட்டதுடன் முழு வேலையில் 16% கட்டுமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. இச்சிறைச்சலை நிர்மாணத்தில் மனிதாபிமானத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு சிறைச்சாலை வைத்தியசாலை, தொழிற் பயிற்சி நிலையம், கைத்தொழிற் பிரிவு, கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்யும் நிலையம், விளையாட்டு மைதானம், வரவேற்பறை, சிறைக்கைதிகளைச் சந்திக்குமிடம், உத்தயோகத்தர்களுக்கான விடுதி, போஜனசலை உட்படப் பல பொது வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.



IV. மாத்தறை மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளைக் கட்டுவதற்காக்க் காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்து கட்டட நிர்மாணப் பணிகள் தொடங்கவிருக்கின்றன.

V. எதிர்வரும் ஆண்டுகளில், நீர்கொழும்பு, காலி மற்றும் மட்டக்களப்பு புதிய சிறைச்சாலைகளை அமைப்பதற்குக் காணி பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.2. சிறைப்படுத்தப்பட்ட கைதிகளைச் சமூகமயப்படுத்தல்

கைதிகள் இடநெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு அனுமதிப் பத்திரத்தின் மீது விடுவித்தல், சிறைச்சாலைப் பொது மன்னிப்புச் சுதந்திர தினம் மற்றும் வெசாக் தினங்களில் விசேட அரச மன்னிப்பின் கீழ் 9688 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## 2. <u>மனித வள அபிவிருத்தி</u>

### 2.1. வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் பதவிகளை உருவாக்குதல்

#### 2.1.1. புதிய பதவிகளை ஏற்படுத்தல்

இந்த ஆண்டுக்குள் 11 பதவிநிலை ஜெயிலர் (பெண்கள்) பதவிகள் 11 உம் ஆரம்பநிலை (பெண்கள்) பதவிகள் 80 உம் மொத்தமாக 91 பேராக பதவியணியைப் பெருப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2. பதவி உயர்வு

2014 ம் ஆண்டில் கீழ்வரும் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு ஆவண செய்யப்பட்டுள்ளது.

| பிரிவு | பதவிப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதான ஜெயிலர் (ஆண்) | 20 |
| 2. | புனர்வாழ்வு அலுவலர் (1 பதவிநிலை ஆண் ) | 5 |
| 3. | புனர்வாழ்வு அலுவலர் (1 பதவிநிலை பெண்) | 1 |
| 4. | 11 பதவிநிலை ஜெயிலர் (பெண்) | 4 |
| 5. | 11 பதவிநிலை ஜெயிலர் (ஆண்) | 58 |
| 6. | சார்ஜன்கள் | 492 |
| 7. | உதவி அலுவலர் (111,11,1) | 16 |
| 8. | தொழிற்சாலை நிர்வாகிகள் | 6 |
| 9. | 1பதவிநிலை தொழில் ஆலோசகர்கள் / 11 பதவிநிலை தொழில் ஆலோசகர்கள் | 51 |
| | **மொத்தம்** | **653** |

மேலும் சிறைச்சாலை ஆணையாளர் பதவிகள் 03, விசேடதர சிறைச்சாலை அதிகாரி பதவிகள் 05, சிறைச்சாலை அதிகாரி பதவிகள் 07 மற்றும் உதவி சிறைச்சாலை அதிகாரி பதவிகள் 15 உம் தொடர்பாக நியமனம் வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளன.

#### 2.1.3. புதிய ஆட்சேர்ப்புகள்

2014 ஆம் ஆண்டில் இடம் பெற்ற புதிய ஆட்சேர்ப்பு பின்வருமாறு.

| பிரிவு | பதவிப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சிறைக் காவலர் | 239 |
| 2. | மோட்டார் சாரதிகள் | 25 |
| 3. | மோட்டார் இயக்குநர் | 5 |
| 4. | டிரக்டர் சாரதி | 5 |
| 5. | காவலாளிகள் | 9 |
| 6. | தொழிலாளர் | 1 |
| | **மொத்தம்** | **284** |

சிறைச்சாலை திணைக்களம் தொடர்பாக அனுமதிக்கப்பட்டுள்ள பதவி எண்ணிக்கையின் வெற்றிடங்கள் 2146 ஆகும். அதன் பொருட்டு புதிய ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.2. செயற்றிறன் மிக்க சேவையின் பொருட்டு பயிற்சியளித்தல்

சிறைச்சாலை திணைக்களத்தின் நோக்கம் மற்றும் இலக்கை அடையக் கூடிய திறமைகள் கொண்ட செயற்றிறன் மிக்க அலுவலர்களை உருவாக்குவதற்காக 2862 அலுவலர்களுக்கு 8.183 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சி நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2.3. 2015 தயட்ட கிருல அபிவிருத்திக் கண்காட்சி நடைபெறும் அதேவேளை மாத்தறை கொட்டவிலவத்தை சிறைச்சாலைப் பயிற்சிப் பாடசாலையைக் கட்டுமானம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டில் 15 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

### 3. <u>கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்தலைத் தரமானதாக அபிவிருத்தி செய்தல்</u>

### 3.1. திறந்த வெளி சிறைப் பாசறைகளை நிறுவுதல்

இதன் மூலம் தற்போது நிலவும் சிறைச்சலைகளின் எண்ணிக்கைகளைக் குறைத்து அவற்றைப் புனர்வாழ்வு மையங்கள் மற்றும் திறந்த வெளிச் சிறைப் பாசறைகளாக அமைத்து அதன் மூலம் குற்றம் செய்தவர்களைச் சிறையில் அடைப்பதற்குப் பதிலாக அவர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் தரமானவையாக இடம்பெறச் செய்யமுடியும்.

கிரிபாவ திறந்தவெளிச் சிறைப் பாசறையை உருவாக்கவும், ஹங்கிலிபொல திறந்தவெளிச் சிறைப் பாசறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

3.2. சிறைச்சாலைக் கைதிகள் முறையான கல்வியைப்பெற்றுக் கொள்வதற்காக வட்டறக்க சிறைச்சாலைப் பாடசாலைக் கல்வி அமைச்சுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. தற்போது இளந்தவறாளர்கள் 39 பேரும் சாதாரண தவறாளர்கள் 17 பேருமாக 56 மாணவர்கள் கல்வி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

### 3.3. கைதிகளின் பொருட்டு இடம்பெற்ற புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள்

| பிரிவு | வேலைத் திட்டம் | வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | கைதிகளின் எண்ணிக்கை | செலவுத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சர்வமத வேலைத் திட்டங்கள் | 4427 | 132742 | 708,148.00 |
| 2. | கல்வி மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள் | 5990 | 225018 | 544,560.00 |
| 3. | விளையாட்டு மற்றும் பிற | 1605 | 56882 | 1,293,086.00 |
| 4. | பரிசளித்தல் (கைதிகள் மதிப்பீடு) | 198 | 5209 | 217,750.00 |

- முதல் தடவையாக சிறைச்சாலை வதிபவர்களான 500 இளஞ்சிறார்களைச் சேர்த்துப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. முதலாவது இளஞ்சிறார் பாசறை 2014 பெப்ரவரி மாதம் 08, 09 ஆகிய இரண்டு நாட்களில் நுவரெலியா பீட்ரு இளஞ்சிறார் பாசறையில் நடைபெற்றது.
- சிறைக் கைதிகளின் கலைத் திறமையை அபிவிருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு வெளிமடை சிறைச்சாலையில் வசிப்பவர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட "வீரன் இறக்க மாட்டான்" என்ற மேடை நாடகம் 2014 பெப்ரவரி மாதம் 28 ம் திகதி மேடையேற்றப்பட்டது.



- சமையல்காரர் பயற்சி பெற்ற சிறைச்சாலை வசிப்போர் முதல் தடவையாக தயாரித்தளித்த உணவு கண்காட்சி 2014 மாசி மாதம் 08 ஆம் திகதி காலி முகத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- சகல சிறைச்சாலை நிறுவனங்களினதும் பங்குபற்றல் கீழ்ச் சிறைச்சாலை வெசாக் வலயம் காலி சமனல விளையாட்டரங்கிலும், பொசன் வலயம் அக்குரஸ்ஸ அமலகொடை மகா வித்தியாலய விளையாட்டரங்கிலும், எசல வலயம் தெனியாய மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்குகளிலும் இடம் பெற்றன.
- சிறைச்சலைத் தலைமையகத்தில் 2014.09.03 ஆம் திகதி நடைபெற்ற விழாவில் 50 சிறைச்சலை உத்தயோகத்தவர்களுக்கு மோட்டார்ச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.
- மாத்தறை கொட்டவிலவத்தயில் புதிய சிறைச்சலைப் பயிற்சிப் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 2014.09.05 ஆம் திகதி நடைபெற்றது.
- சிறைச்சாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் 2014.12.06 மற்றும் 07 ஆம் திகதிகளில் கொழும்பு - 7 இல் அமைந்துள்ள ரொறின்டன் விளையாட்டு மைதானத்தில் நிகழ்ந்தது.
- பண்டாரநாயக்க சர்தேச மாநாட்டு மண்டபத்தில் 2014.09.07 ஆம் திகதி சிறைச்சலைச் சேவைக்கான பதக்கம் வழங்கும் வைபவம் நிகழ்ந்த்து.

### 3.4. கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான அனைத்து அமைச்சுகளின் பங்களிப்பு

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் தலைமையில் நடைமுறைப் படுத்தப்படும் அமைச்சுகளுக்கு இடையிலான வேலைத் திட்டத்தின் கீழ் 18 அமைச்சுகளின் பங்குபற்றுதலில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

**செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள்**

| பிரிவு | பங்களிப்பு செய்யும் அமைச்சு / நிறுவனம் | எதிர்பார்க்கப்பட்ட வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | நடைமுறைப்படுத் தப்பட்ட வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | பயன் பெற்ற கைதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தொழிற் பயிற்சி அதிகார சபை | 361 | 361 | 1091 |
| 2. | தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபை | 123 | 123 | 295 |
| 3. | பண்பாட்டலுவலகள் அமைச்சு | 33 | 33 | 49 |
| 4. | தொழிற் கல்வி மற்றும் பயிற்றுவிக்கும் திணைக்களம் | 18 | 18 | 45 |
| 5. | கல்வி அமைச்சு (முறைசாராக் கல்வி அலகு) | 283 | 283 | 802 |
| 6. | கோட்டக் கல்வி அலுவலகம் | 39 | 39 | 84 |
| 7. | தேசிய இளைஞர் சேவை மன்றம் | 6 | 6 | 10 |
| 8. | மரபார்ந்த தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சு | 6 | 6 | 10 |
| 9. | விவசாய அமைச்சு, கமநல சேவை மையம் | 18 | 18 | 15 |
| 10. | சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்களம் | 228 | 228 | 5006 |
| 11. | உண்ணாட்டு மருத்துவ அமைச்சு | 37 | 37 | 390 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | நீதி அமைச்சு | 37 | 37 | 127 |
| 13. | அபாயகரமான மருந்துகள் கட்டுப்பாட்டு தேசிய சபை | 118 | 118 | 1775 |
| 14. | சிறு கைத்தொழில் அமைச்சு | 6 | 6 | 60 |
| 15. | சுறாடல் அமைச்சு | 1 | 1 | 100 |
| 16. | சமூக சேவைத் திணைக்களம் | 40 | 40 | 340 |
| 17. | பண்பாடு மற்றும் கலையலுவல்கள் அமைச்சு | 18 | 18 | 30 |
| 18. | மகளிர் அலுவல்கள் அமைச்சு | 12 | 12 | 13 |

## 4. அபிவிருத்திச் செயற்பாடுகளில் சிறைக்கதிகளின் உழைப்பைப் பயன்படுத்துதல்

### 4.1. விவசாயத் தொழில், விலங்கு பராமரிப்பு மற்றும் தொழிற்சாலை பிரிவுகளை மேம்படுத்துவதன் ஊடாக உற்பத்தி பயனுறுதன்மையை உயர்த்துதல்

சிறைச்சாலை கைதிகளை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யச்செய்து, அவர்களின் புனர்வாழ்வுச் செயற்பாடுகள் மிகவும் நேர்த்தியான முறையில் இடம் பெறச் செய்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் மூலம் கைதிகளின் உழைப்பைப் பெற்று சிறைச்சாலைத் தேவைகளைத்தன்னிறவை நோக்காகக்கொண்டிருத்தல்.

| சிறைச்சாலை | செயற்படுத்தப் படும் தொழில் | செலவு | வரவு |
|---|---|---|---|
| **வட்டறக்க** | விவசாயம், விலங்கு வளர்ப்பு, தும்புத்தடி, விளக்குமாறு | 574,510.00 | 1,829,157.87 |
| **மகர** | விவசாயத் தொழில்கள, கம்மாளர், தும்பு / மூங்கில்,தச்சு, விலங்கு பராமரிப்பு, பேக்கரி, தையல் | 3,964,239.12 | 10,577,313.79 |
| **தளுப்பெத்த** | நெசவுத் தொழில், தையல், தும்பு ஆலை, செங்கல், பேக்கரி, தச்சு, தும்பு / மூங்கில், சலவை, சோப்பு, கம்மாளர், கராஜ், கடிதவுறை | 6,351,143.03 | 11,433,340.28 |
| **போகம்பரை** | தும்பு / மூங்கில்,தையல், கம்மாளர், தச்சுவேலை, நெசவு, சலவை, மேசன், பேக்கரி, சவர்க்காரம், கராஜ், | 1,106,436.00 | 4,510,764.64 |
| **பல்லேக்கலை** | பேக்கரி, செங்கல், சலவை, நெசவு, தையல், தச்சு வேலை, தும்பு / மூங்கில், சவர்க்காரம், மேசன்,காலணி தயாரிப்பு, கம்மாளர், கராஜ் | 22,528,701.88 | 27,793,270.38 |
| **அனுராதபுரம்** | பேக்கரி, சலவை, தையல், தும்பு / மூங்கில், நெசவு, தச்சு வேலை, செங்கல், சவர்க்காரம், கம்மாளர், கராஜ் | 10,564,516.61 | 15,411,755.95 |
| **வீரவில** | பயிர்ச் செய்கை, தும்பு / மூங்கில், விலங்கு பராமரிப்பு, தச்சு வேலை, கம்மாளர், செங்கல், பேக்கரி | 1,387,887.00 | 6,346,601.90 |
| **வெளிமடை** | பேக்கரி, தச்சு வேலை,சலவை, கம்மாளர்,தும்பு / மூங்கில், சவர்க்காரம்,நெசவுத் தொழில், கராஜ், கடித உறை | 18,860,810.47 | 34,267,579.01 |
| **தல்தென** | சலவை, தையல், நெசவுத் தொழில்,பேக்கரி, தும்பு / மூங்கில், தச்சு வேலை,செங்கல், சவர்க்காரம், கடித உறை கம்மாளர், கராஜ், | 4,246,431.80 | 6,589,912.35 |

| | | | |
|---|---|---|---|
| | அலங்காரம் | | |
| **குருவிட்டை** | பேக்கரி, விவசாயம், விலங்கு பராமரிப்பு | 408,713.50 | 3,531,177.66 |
| **பூஸ்ஸ** | விவசாயம்,பேக்கரி, விலங்கு பராமரிப்பு, நானாவிதம் | 862,581.89 | 2,452,915.00 |
| **வாரியப்பொல** | பயிர்ச் செய்கைப் பிரிவு, விலங்கு பராமரிப்பு, ப்ளொக் கல் | 340,494.00 | 1,853,378.62 |
| **தங்காலை** | பயிர்ச் செய்கைப் பிரிவு, விலங்கு பராமரிப்பு | 462,598.00 | 1,821,745.35 |
| **பதுளை** | சலவைப் பிரிவு | - | 41,692.50 |
| **கொ.ம.சிறை** | கராஜ் | 2,627,194.50 | 2,220,039.75 |
| **மொத்தம்** | | **74,286,257.80** | **130,680,645.03** |

## 9.2 சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்

1999 ஆம் அண்டு 46 ஆம் இலக்க மக்கள் அடிப்படைச் சீர்திருத்தச் சட்டத்தின் ஊடாகக் குற்றவாளிகளைச் சிறையில் அடைப்பதற்குப் பதிலாக மாற்றுத் தண்டனை முறையாக அறிமுகம் செய்யப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தச் செயல்முறை 2000 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. அது 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதமளவில் 97 நீதிமன்ற கோட்டங்கள் வரை வளர்ச்சியடைந்துள்ளன.

அந்த நீதிமன்ற கோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரதேச அலுவலகங்கள் ஊடாக சீர்திருத்தக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளல், தொழிற் பயிற்சி மற்றும் சீர்திருத்த வேலைத் திட்டங்களை நடாத்திச்செல்வதற்கு இந்தக் கட்டளைகளைப்பெற்றவர்களைச் சம்பந்தப்படுத்தி உற்பத்தி மற்றும் கமத்தொழில் போன்ற பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

**2014 ஆம் ஆண்டில் அடைய அடைய எதிர்பார்க்கப்படும் இலக்குகள்**

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினால் இடைக்கால அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| தொ இல . | நிகழ்ச்சித் திட்டம் | செயற்பாடுகள் | எதிர்பார்க்கப் பட்ட எண்ணிக்கை | நடைமுறைப் படுத்தப்பட்ட எண்ணிக்க |
|---|---|---|---|---|
| 1 | சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைப் பிமாணங்களை அதிகரித்துக் கொள்ளல் | நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான அறிவுறுத்தல் செயற்றிட்டம் | 20 | 12 |
| | | மக்களுகளை அறிவுறுத்தல் | | |
| | | பிரதேச அலுவலகக் கண்காணிப்பு | 97 | 61 |
| 2 | சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை பெற்றவர்களுக்காக நிகழ்ச்சித் திட்டத்தை நடை முறைப்படுத்தல் | ஆலோசனை செயற்றிட்டம் | 1030 | 1321 |
| | | ஆன்ம அபிவிருத்தி செயற்றிட்டம் | 400 | 274 |
| | | மருத்துவ பரிகாரம் பெற வைத்தல் (ஆணை பெற்றவர்கள் எண்ணிக்கை) | 600 | 1562 |
| | | தொழிற் பயிற்சி செயற்றிட்டம் | 200 | 226 |
| 3 | சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை பெற்றவர்களின் உழைப்பை நாட்டின் | விசேட செயற்றிட்டங்கள் மூலம் கட்டளை பெற்றவர்களின் உழைப்பை நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு செய்ய வைத்தல் | 90 | 55 |


| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தியில் ஈடுபடுத்தல் | சிரமதான செயற்றிட்டங்கள் | 750 | 669 |
| 4 | அலுவலக முறைமையை மேம்படுத்தல் | இணையப் பக்கம் தயாரித்தல் | 01 | 01 |
| 5 | மானிட வள அபிவிருத்தி | சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்களுக்கான பயிற்சிச் செயற்றிட்டங்கள் | 01 | 03 |
| | | வேலை பரீட்சகர்களுக்கான பயிற்சிச் செயற்றிட்டங்கள் | 01 | 01 |
| | | ஆலோசனை டிப்ளோமா / சான்றிதழ் பாடத் திட்டம் தொடர்பில் அலுவலர்களை ஈடுபடுத்தல் | 03 | 03 |
| 6 | அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்காக அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 215 | 215 |
| | | தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு கணினி வழங்குதல் | 24 | 24 |

## 2014 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற இலக்குகள்

1. **சிறைச்சாலைக்குள் அடைப்பதற்குப் பதிலான மக்கள் சீர்திருத்த முறைமை**


### 1.1. பெற்றுக்கொள்ளப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளின் எண்ணிக்கை

| இலக்கம் | மாகாணம் | சீர்திருத்தக்கட்டளை பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | மேற்கு | 5856 |
| 02. | மத்திய | 1824 |
| 03. | ஊவா | 463 |
| 04. | தெற்கு | 1750 |
| 05. | சபரகமுவை | 1406 |
| 06. | கிழக்கு | 685 |
| 07. | வடமேல் | 3780 |
| 08. | வட மத்திய | 651 |
| 09. | வடக்கு | 571 |
| | **மொத்தம்** | **16986** |



**1.2. குற்றத்தின் தன்மைக்கேற்ப சீர்திருத்தக் கட்டளைகள்**


| தொ.இல. | குற்றம் | கட்டளை பெற்றவர்கள் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 01. | ஹெரோயின் | 1752 | 10.31 |
| 02. | கஞ்சா | 1671 | 9.84 |
| 03. | சட்ட விரோத மதுபானம் | 9232 | 54.35 |
| 04. | பொதுமக்கள் பாதிப்பு | 1962 | 11.55 |
| 05. | திருட்டு | 256 | 1.51 |
| 06. | ஏமாற்றுதல் | 19 | 0.11 |
| 07. | அனாவசிய ஆயுதங்கள் | 9 | 0.05 |
| 08. | திருட்டுப் பொருளை வைத்திருத்தல் | 53 | 0.31 |
| 09. | சூது | 621 | 3.66 |
| 10. | கலகம் (குழப்பம்) | 194 | 1.14 |
| 11. | வேறு | 1217 | 7.16 |
| | **மொத்தம்** | **16986** | |



## 1.3. சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளைப் பெற்றவர்களுக்காக நடாத்தப்படும் சீர்திருத்தச் செயற்றிட்டங்கள்

சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைளைப்பெற்றவர்களுக்காக ஆலோசனை மற்றும் மதுநிவாரணம், ஆன்மீக மற்றும் தொழில் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் அவர்களைச் சம்பந்தப்படுத்தி 3808 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தீவு முழுதும் வெற்றிகரமாக நீதி மன்ற வலய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | செயற்றிட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆலோசனை மற்றும் நிவாரணம் | 1136 |
| 2. | அபிவிருத்தி மற்றும் சிரமதான வேலைத் திட்டம் | 602 |
| 3. | ஆன்மீக அபிவிருத்தி | 263 |
| 4. | தொழிற் பயிற்சி | 245 |
| 5. | மருத்துவச் சிகிச்சை (பெற்றுக்கொண்ட எண்ணிக்கை) | 1562 |




### 1.3.1 மாகாண மட்டத்தில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்சித் திட்டங்கள்

மாகாண மட்டத்தில் பிரதேச அலுவலகங்கள் பல்வேறு சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைளைப் பெற்றவர்களுக்காகக் கீழ்வரும் பல்வேறு வேலைத் திட்டங்களை செயற்படுத்தப்பட்டுள்ளன.

| தொ. இல | மாகாணம் | ஆலோசனை மற்றும் மது நிவாரண செயற்றிட்டங்கள் | அபிவிருத்தி மற்றும் சிரமதான செயற்றிட்டங்கள் | ஆன்மீகஞ்சார் செயற்றிட்டங்கள் | தொழிற் பயிற்சி செயற்றிட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | மேற்கு | 408 | 322 | 59 | 70 | 859 |
| 02. | மத்திய | 197 | 29 | 104 | 8 | 338 |
| 03. | ஊவா | 123 | 66 | 14 | 11 | 214 |
| 04. | தெற்கு | 58 | 14 | 9 | 2 | 83 |
| 05. | சப்பிரகமுவ | 39 | 23 | 4 | 3 | 69 |
| 06. | வடமேல் | 158 | 98 | 32 | 87 | 375 |
| 07. | வட மத்திய | 105 | 32 | 21 | 170 | 175 |
| 08. | வடக்கு | 63 | 23 | 12 | 0 | 98 |
| 09. | கிழக்கு | 169 | 62 | 19 | 26 | 276 |
| | **மொத்தம்** | **1320** | **669** | **274** | **224** | **2487** |

### 1.3.2. தொழிற் பயிற்சி மற்றும் கமத் தொழில் செற்றிட்டங்கள்

தீவில் சகல பிரதேச அலுவலகங்களிலும் இதுவரை சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைளைப் பெற்றவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி 45 கமத் தொழில் மற்றும் உற்பத்திச் செயற்றிட்டங்கள் இடம் பெற்றுள்ளன. உளவள அபிவிருத்தியினூடாகக் குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுதுவதன் பொருட்டு அவர்களை உட்படுத்துவதை பிரதான நோக்காகக் கொண்டுள்ளதுடன் உற்பத்திகளை விற்பனை செய்வதால் கிடைக்கும் வருமானத்தினை அரசின் வருமானத்தில் சேர்ப்பதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையைப் பெற்றவர்களின் உழைப்புடன் 717,399.00 ரூபா செலவு செய்யப்பட்டு இடம் பெற்ற செயற்றிட்டங்கள் மூலம் 632.646.00 ரூபா வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



*வலஸ்முல்லை தென்னங்கன்று நாற்றுமேடை*




*மத்துகம புரன் வயற்செய்கை செயற்றிட்டம்*

## 2. <u>தரமான சேவைக்கான மனித வள அபிவிருத்தி</u>

### 2.1. அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் செயற்றிட்டங்கள்

2014.07.22 ஆம் திகதி சிறைச்சாலைத் திணைக்களத்தின் பகுப்பாய்வு மற்றும் சீர்திருத்த பயிற்சி மையத்தில் 50 வேலை பரீட்சகர்களுக்கு 212,691.00 ரூபா செலவில் அடிப்படை உளவியல் ஆலோசனை சம்பந்தமாக 5 நாள் பயிற்சிசெயற்றிட்டம் நடைபெற்றது. அவ்வாறே, அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஆலோசனை தொடர்பான டிப்ளோமா பாடத் திட்டத்தைக் கற்பதற்காக சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்கள் 03 பேருக்கு 155,000.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

### 2.2. கைதிகளின் குடும்ப நலனோம்பல், அபிவிருத்தி மற்றும் பிற்பொறுப்புச் செயற்பாடுகளை வலுப்படுத்தல்

கைதிகளின் குடும்ப நலனோம்பல், அபிவிருத்தி மற்றும் பிறபொறுப்புச் செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் 242 அபிவிருத்தி அலுவலர்கள் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ஊடாக மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் மற்றும் குடும்பத்துக்குப் பொருத்தமான வகையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் 100 சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்களுக்காக 147,500.00 ரூபா. செலவில் மகிந்த சிந்தனை எஞ்சிய நோக்கைச் செயல்படுத்துவதற்கான திட்டங்கள் பற்றி அறிவுறுத்தல் செயற்றிட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

3. <u>சீர்திருத்த செயற்பாடுகளை வலுப்படுத்தும் உபாயத்தைச் செயல்படுத்தல்</u>

**3.1. மாகாண மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்**

தீவில் சகல சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலகங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்களைச் சம்பந்தப்படுத்தி மாகாண மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் ஊடாகப் பிரதேச அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கிடையே எழும் பிச்சினைகளை அடையாளம் காண்பதற்கு இயலும். அத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தச் செயற்பாடுகளை வலுப்படுத்தல் தொடர்பிலான எஞ்சிய திட்டங்களை கலந்துரைடல் செய்வதற்கு மற்றும் தேவையான செயல்முறையை மேற்கொள்வதற்குமான சந்தர்ப்பமாக அமையும்.

**3.2. சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டம் தொடர்பானஅறிவுறுத்தல்செயற்றிட்டங்கள்**

சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் நீதவான்கள், சட்டத்தரணிகள் மற்றும் அரச அலுவலர்ளை அறிவுறுத்தும் வகையில் 24 செயற்றிட்டங்கள் ஏப்ரல் மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்டன.

**புதிய அலுவலகங்களைத் திறந்து வைத்தல்**

3 தசாப்தங்கள் முழுதும் இடம்பெற்ற போர் முடிவடைந்ததோடு சமுதாயஞ்சார்சீர்திருத்த செயற்பாடுகளை வட மாகாணத்திலும் பரவச் செய்யும் பொருட்டு முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் மல்லாகம் ஆகிய பிரதேசங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

**3.3. பணியாளர் குழுவுக்குப் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல்**

சமுதாயஞ்சார் சீர்திருத்தச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு வட மாகாணத்துக்காகப் புதிய வேலைப் பரீட்சகர்கள் மூவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 25 அபிவிருத்தி அலுவலர்களும் தலைமை அலுவலகத்திற்காக 05 அலுவலக சிற்றூழியர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

## 10. சட்டமா அதிபர் திணைக்களம்

**நோக்கு**

இலங்கைக்காகவும் அதில் வாழ்கின்ற சகல மக்களுக்காகவும் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காக பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக செயற்படுதல்.

**குறிக்கோள்**

இலங்கை அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு தேவையான சகல சட்ட முறையான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை உடனடியாக வழங்குதல் மற்றும் அரசாங்கத்தின் விரிவான குறிக்கோள்களை விஸ்தரிப்புச் செய்யும் செயற்பாட்டின் போது விசேடித்த பணியொன்றை நிறைவேற்றுதல்.

**பணி**

இலங்கையின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்காக கௌரவத்துடனும், அபிமானத்துடனும் நேர்மையாகவும் செயற்படுதல் மற்றும் எம்மால் இயலுமான அளவில் இலங்கை மக்களுக்கு சேவை செய்தல்

சமுதாய பொருளாதார சுபீட்சம் சம சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதாபிமானத்தை ஊக்குவிக்கும் முயற்சியின் போது இலங்கை மக்களுக்கென நியாயம், பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரபட்சமின்றியும் நியாயமானதாகவும் இலங்கையின் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**10.01 பின்னணி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பாக தோற்றுகின்ற பிரதான சட்ட அலுவலர் சட்டமா அதிபர் என்பதுடன் திணைக்களத் தலைவரும் கணக்கீட்டு அலுவலருமாக அவரே பணியாற்றுகின்றார். ''ஏ'' தரத்தின் திணைக்களமொன்றாகிய சட்டமா அதிபர் திணைக்களம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1651/20 ஆம் இலக்க 2010.04.30 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக அதிமேதகு சனாதிபதியின் பொறுப்பில் இருக்கின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் மத்திய அரசாங்கத்திற்கு மாகாண சபைகளுக்கு அரசாங்கத் திணைக்களங்களுக்கு நியதிச் சட்டசபைகளுக்கு மற்றும் பகுதி அளவிலான அரசாங்க நிறுவனங்களுக்கு சட்ட முறையான உதவிகளை வழங்குகின்றது. அவ்வுதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் போது திணைக்களத்தின் சட்ட அலுவலர்களினால் பிரதானமாக குடியியல் , குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தகம் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு ஆலோசனைகளை வழங்குதலும் தீவின் உயர் நீதிமன்றத்தில் மற்றும் ஏனைய நீதிமன்றங்களிலும் தொழில் நியாய சபைகளிலும் தொடுக்கப்பட்டுள்ள வழங்குகளில் அரசாங்கத்தையும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துதலும் செய்யப்படுகின்றன.

குடியியல் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு என்னும் பிரதான மூன்று பிரிவுகளின் மூலம் திணைக்களத்தின் குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் நிருவாக நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக தாபனப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகளுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் கருமங்களை வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் செயற்படுத்துவதற்காக கூட்டுத்தாபனப் பிரிவு அவசரகாலக் கட்டளைகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படுகின்ற வழக்குகள் சம்பந்தமாக செயலாற்றுகின்ற ஈ.ஈ.ஆர் கூறு சிறுவர் துஷ்பிரயோகம் வழக்குக் கூறு குடிவரவு குடியகழ்வுக் கூறு பொதுமக்கள் முறைப்பாட்டுக் கூறு உயர் நீதிமன்றக் கூறு ஆகிய கூறுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினுள் தொழில்படுகின்றன.

**10.02 சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடு**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடு பின்வருமாறு சுருக்கமாக எடுத்துக் காட்டலாம்.

- குடியியல், குற்றவியல், அரசியலமைப்பு, வர்த்தகம் ஆகிய விடயங்கள் சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் ஆலோசனைகளை வழங்குதல்.
- தீவின் உயர் நீதிமன்றத்தில் ஏனைய நீதிமன்றங்களில் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் அரசாங்கத்தையும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதிப்படுத்துதல்.
- புதிய சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது மற்றும் உளதாம் சட்டங்களைத் திருத்தஞ் செய்யும் போது தேவையான சட்ட முறையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றும் போது திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் சட்ட பணியாட்டொகுதிக்கு உதவுகின்றன.

- குற்றவியல் வழக்குப் பிரிவு
- குடியியல் பிரிவு
- அரச சட்டத்தரணிகள் பிரிவு
- உயர் நீதிமன்றக் கூறு
- கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் கருமங்களை வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் செயற்படுத்துவதற்காக விசேடமாக இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் உரித்தாக்கப்பட்டுள்ள விசேட கூறுகளும் செயல்படுகின்றன.

அக் கூறுகளாவன

- பொது மக்கள் மனுக்கள் கூறு (பொது மக்கள் மனுக்கள் சம்பந்தமாக இப் பிரிவு செயல்படுகிறது)
- சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய வழக்குக் கூறு (சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பான வழக்குகள் சம்பந்தமாக செயல்படுவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது)
- ஈ.ஈ.ஆர் கூறு (அவசர காலக் கட்டளைகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படுகின்ற வழக்குகள் சம்பந்தமாக செயல்படுகிறது)
- குடிவரவு குடியகழ்வுக் கூறு (குடிவரவு குடியகழ்வுச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படுகின்ற வழக்குகள் சம்பந்தமாக செயல்படுகின்றது)

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக மேற்கூறிய பிரிவுகள் மற்றும் கூறுகள் செயல்படுவதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக தாபனப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவினதும் 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையை பின்வருமாறு சுருக்கமாக எடுத்துக் காட்டலாம்

| கிளை | திறந்த கோவைகளின் எண்ணிக்கை | குற்றப்பகிர்வுகள் அனுப்பப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | ஆலோசனைகள் வழங்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| குடியியல் பிரிவு | 2686 | --- | --- | --- | 118 |
| குற்றவியல் வழக்குப் பிரிவு | 5496 | 2210 | 1304 | 870 | 3970 |
| அரச சட்டத்தரணிகள் பிரிவு | 128 | -- | -- | -- | 1712 |
| உயர் நீதிமன்றக் கூறு | 392 | -- | -- | -- | 680 |
| கூட்டுத்தாபனப் பிரிவு | 1885 | -- | -- | -- | 1751 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குக் கூறு | 4428 | 739 | 540 | 909 | 2188 |
| பொதுமக்களின் மனுக்கள் கூறு | 530 | -- | -- | -- | 220 |

குடியியல் பிரிவின் மூலம் திறக்கப்படுகின்ற கோவைகளில் பெரும்பாலானவை அரச சட்டத்தரணிகள் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | *496,720,000* | *496,288,535* |
| *மூலதன செலவினம்* | *38,300,000* | *38,190,388* |
| ***மொத்தம்*** | ***535,020,000*** | ***534,478,923*** |

# 11. சட்டவரைஞர் திணைக்களம்

**நோக்கு**

அரச கொள்கைகளை சட்ட முறைமையொன்றாக பரிவர்த்தனை செய்வதற்காக அரசாங்கத்திற்கு உதவுவதனூடாக நல்லாட்சியின் பாதுகாப்பைப் பேணுதல்

**பணி**

அரச கொள்கைகளை சட்ட முறைமையொன்றாக பரிவர்த்தனை செய்வதற்கு உதவு பொருட்டு அரசியலமைப்புக்கு அமைவாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சட்டங்களை வரைதல்

### 11.1 அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம் 'ஏ' தரத்திலான அரச திணைக்களமொன்றாகும். 2010 ஏப்பிரல் 30 ஆம் திகதிய 1651/20 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் இத்திணைக்களம் 2015 சனவரி 18 ஆம் திகதி வரையில் மாண்புமிகு சனாதிபதி அவர்களின் முதல் கண்காணிப்பின் கீழ் தொழில்படுகிறது.

சட்டவரைநர் திணைக்களத்தின் பிரதான பணியாவது அரசியலமைப்புக்கு மற்றும் அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு அமைவாக பல்வேறு விடயங்கள் தொடர்பான அரச கொள்கைகளைச் சட்டங்களாக ஆக்குவதே ஆகும். புதிய சட்டங்களை விதித்தல் உளதாம் சட்டங்களை திருத்தஞ் செய்தல் மற்றும் பல அரச அமைச்சுக்களிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இடைச் சட்டங்களை மீள் நோக்குவதற்காக திணைக்களத்தினால் வரைவுகள் தயார் செய்யப்படுகின்றன. சட்ட மூலங்களின் மீளாய்வுக்காக கூட்டப்படுகின்ற பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல், பாராளுமன்றத்தில் தோற்றுதல் மற்றும் சட்ட மூலங்கள் தொடர்பான விவாதங்கள் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்துடன் கூட்டிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல் என்பன இத்திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன. இத்திணைக்களம் அமைச்சுக்களின் கீழுள்ள அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகள் உட்பட சகல அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சேவைகளை வழங்குகின்றது. நானாவித வரைவுகள் மற்றும் இடைச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பாக அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சட்டமுறையான ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பதும் இத்திணைக்களத்தால் செய்யப்படுகின்றன.

**சட்டவரைவுகள் தொடர்பான சட்டவரைநர் திணைக்களத்தின் செயற்பாடுகள்**

1. புதிய சட்டங்களை விதித்தல் மற்றும் உளதாம் சட்டங்களை திருத்தஞ் செய்வதற்காக சட்டமூலங்களைத் தயாரித்தல்
2. இடைச் சட்டங்களை மீள்நோக்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் இடைச்சட்டங்களை வரைதல்
3. சட்டமூலங்கள் தொடர்பாக சட்ட ஆலோசனைகளை வழங்குதல்
4. சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளல் சம்பந்தப்பட்ட கடமைகளின்போது பாராளுமன்றத்தில் தோற்றுதல்
5. 1972 ஆம் ஆண்டிற்கு முன்னர் விதிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்
6. மாகாண சபைகள் சட்டவாக்க தயாரிப்பு
7. தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூல மீளாய்வு (கூட்டுத்தாபனங்களின் சட்ட மூலங்கள்)மற்றும்
8. சட்டவரைவு பற்றிய அரச கொள்கைகளை நடைமுறையாகவும் வெற்றிகரமாகவும் தாபிப்பதற்காக குறித்த சார்புடைய அமைச்சுக்களின் ஒத்துழைப்பு மற்றும் அங்கீகாரத்துடன் அத்தகைய கொள்கைகளை அத்திணைக்களத்திற்கே ஏற்புடையதான மீள அமைத்தல்.

விசேடித்த அமைப்பு முறையிலான கடமை நிகழ்ச்சித் திட்டமொன்று இல்லாதிருப்பது இத் திணைக்களத்தின் விசேடித்த அம்சமாகிறது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுவதனால் உத்தேச கொள்கைகளின்மீது, வழங்கப்பட்ட குறிப்பிட்டதொரு காலத்திற்குள் அரச அமைச்சுக்கள் மற்றும் அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களின் சட்டமுறையான தேவைப்பாடுகளின்மீது திணைக்களக் கடமை நிகழ்ச்சித் திட்டம் தயார் செய்யப்பட வேண்டியிருப்பது இந்நிலைக்கான காரணமாகிறது. இதன்படி திணைக்களத்தின் செயலாற்றறிக்கை தயார் செய்யப்படுவது குறித்துரைக்கப்பட்டதொரு ஆண்டு முழுவதிலும் சம்பந்தப்பட்ட சார்புடைய அமைச்சுக்களினால் சட்டங்கள் மற்றும் இடைச் சட்டத் திருத்தங்களுக்காக இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் வெற்றிகரமாக பூர்த்தி செய்வதன் மீதே ஆகும். பூர்வாங்க அல்லது இடைச் சட்டங்கள் ஆகிய எவையாகினும் அவற்றை அந் நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட

சட்டக் காரணிகள் சம்பந்தமாக திணைக்களத்திற்கான சகல அம்சங்களும் மும் மொழிகளிலும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | *69,845,000* | *67,979,040* |
| *மூலதன செலவினம்* | *42,475,000* | *7,858,979* |
| ***மொத்தம்*** | ***112,320,000*** | ***75,838,019*** |

## 12. பொது நம்பிக்கை பொறுப்பு திணைக்களம்

**நோக்கு**

நன்கொடையாளர்கள் மற்றும் அல்லது கருணை நம்பிக்கை நிதியங்கள் அல்லது ஆஸ்திகள் (பணம் மற்றும் அல்லது சொத்து) என்பனவற்றின் உரிமையாளர்கள் சட்ட வரம்புக்குள் அமைந்த தங்களது இறுதி விருப்புகளை கடைபிடிக்க பயனாளிகளின் மிகச் சிறந்த பயனுக்காக அல்லது பொதுமக்களுக்காக நிதியம் பொது நம்பிக்கையாளருக்கு வளங்கப்படுகின்றது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளல்.

**குறிக்கோள்**

பயனாளிகள் அடங்கலாக ஆஸ்திகளுக்கு கட்டுப்பட்ட எல்லா சம்பந்தப்பட்ட தரப்பினர்களை திருப்தி படுத்தும் ஒரு நோக்கத்திற்காக இந்த திணைக்களத்திற்கு பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட இறந்த நபரது நிதியங்கள் மற்றும் ஆஸ்திகளின் நிர்வாகத்தை திணைக்களத்தின் திறன்கள் மற்றும் வளங்கள் மூலமாக சிறந்த சேவையை வளங்குவதாகும்.

### 12.1 பொது நம்பிக்கையாளர் அலுவலகம் மற்றும் சட்ட அந்தஸ்த்து

ஸ்ரீ லங்காவின் பொது நம்பிக்கையாளர் அலுவலகம் ஒரு பெருநிறுவனமாக அந்த பெயரின் கீழ் நித்திய அடுத்தடுத்து ஒரு அதிகாரப்பூர்வ முத்திரையுடன் நிறுவப்பட்டது. வேறு நிறுவனங்கள் போல 1988ம் ஆண்டின் 61ம் இலக்கம் மற்றும் 1983ம் ஆண்டின் 41 வது இலக்க சட்டம் மற்றும் 1975ம் ஆண்டு இலக்கம் 25 மற்றும் 1973ம் ஆண்டு இலக்கம் 44 மற்றும் 1938ம் ஆண்டு இலக்கம் 55 மற்றும் 1931ம் ஆணடு இலக்கம் 11ன் திருத்தப்பட்ட சட்டத்தின் 1922 ம் ஆண்டின் 1வது இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு பெருநிறுவனமாக அந்த பெயரின் கீழ் அதற்கு வழக்கு தொடரவோ அல்லது அதன் மேல் ஏனயவற்றிற்கு வழக்கு தொடரவோ முடியும்.

1988ம் ஆண்டின் 61வது சட்ட இலக்கம் 4ம் பிரிவின் கீழ் பொது நம்பிக்கையாளருக்கு உதவிபுரியும் வகையில் பிரதி பொது நம்பிக்கையாளர் அல்லது பிரதி உறுப்பினர்களை நியமிக்கலாம்.

பிரதி பொது நம்பிக்கையாளர் அல்லது பிரதி உறுப்பினர்கள் பன்னிரெண்டிலிருந்து பதினைந்து வரையிலான அனுபவங்களை உடையவர்களாக இருத்தல் அவசியம். திருத்த சட்டத்தின் கீழ் பகிரப்பட்ட பெரும்பாலான செயல்பாடுகள் மற்றும் கடமைகள் சட்ட பின்னணி மற்றும் பெரும்பாலும் சிவில் சட்டம் சார்ந்ததாக அமையும்.

### 12.02 சட்ட பின்னணி

ஸ்ரீ லங்கா பொது நம்பிக்கையாளர் அலுவலகம் 1988ம் ஆண்டின் 61ம் இலக்கம் மற்றும் 1983ம் ஆண்டின் 41 வது இலக்க சட்டம் மற்றும் 1975ம் ஆண்டு இலக்கம் 25 மற்றும் 1973ம் ஆண்டு இலக்கம் 44 மற்றும் 1938ம் ஆண்டு இலக்கம் 59 மற்றும் 1931ம் ஆண்டின் 11ம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் 1922 ம் ஆண்டின் 1வது இலக்க கட்டளைச்

சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது. பொது நம்பிக்கையாளர் இந்த கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இதன்கீழ் உள்ள சட்டங்களுக்கு கட்டுப்பட்டு அந்த நாமத்தின் கீழ் நியமிக்கப்பட்டு செயற்பட தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

ஸ்ரீ லங்காவில் நம்பிக்கை நிதியங்கள் சட்டம் 1971ம் ஆண்டு 30ம் இலக்கம் மற்றும் 1968ம் ஆண்டு சட்ட இலக்கம் 7 மற்றும் 1934ம் ஆண்டு 1ம் இலகக்ம் மற்றும் 1918ம் ஆண்டு 4ம் இலக்க கட்டளைச் சட்டம் மூலம் திருததப்பட்ட 1917ம் ஆண்டு நம்பிக்கை நிதிய கட்டளை சட்டம் இலக்கம் 9ன் கீழ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நம்பிக்கை நிதியங்களின் 2ம் பிரிவுக்கு அமைய இந்த கட்டளை சட்டம் அல்லது எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படாதிருப்பவை பங்குகளின் கொள்கையால் இங்கிலாந்தின் மேல் நீதி மன்றத்தில் தற்போதைக்கு அமுலில் இருக்கும்போது தீர்மானிக்கப்படும்.

## 12.03 பொது நம்பிக்கையாளரது பொதுவான ஆட்சியுரிமை மற்றும் பணிகள்

பொது நம்பிக்கையாளர், பொது நம்பிக்கையாளர் கட்டளை சட்டம், குடியியல் நடைமுறை சட்டக்கோவை, நீதித்துறை சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நியமிக்கப்பட மற்றும் அந்தப் பெயரின் கீழ் செயல்பட தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.

1. ஒரு சாதாரண நம்பிக்கையாளராகவும் மற்றும் பாதுகாப்பு வழங்கும் நம்பிக்கையாளராகவும் இருத்தல் அவசியம்.
2. ஒரு திரட்டுவதற்கான கட்டளையின் கீழ் ஆஸ்திகளை சேகரிப்பவராக
3. ஒரு பராயம் அடையாதவரது ஆஸ்தியின் மேற்பார்வையாளராகவும் மற்றும் சரியான மனநிலை அற்ற நபர் அல்லது பராயம் அடையாதவருக்கு குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் அத்தியாயம் XXXV கீழ் நடவடிக்கைகளுக்காக ஒரு அடுத்த நண்பர் அல்லது பாதுகாவலளர் இருத்தல்
4. சரியான மனநிலை அற்ற ஒரு நபரது ஆஸ்திக்கு ஒரு மேற்பார்வையாளராக (மாவட்ட நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்படும்போது)
5. பரஸ்பர இணக்கத்துடன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தின் பிரகாரம் அசையா சொத்துக்களின் முகாமையாளராக 9ஆயினும் பாதுகாப்பாளர் நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்ட பொது நம்பிக்கையாளர் முகாமைத்துவ அதிகாரங்களை செயற்படுத்த அல்லது மேளாண்மை நம்பிக்கையாளர்கள் சபையில் சிறப்பு அதிகார ஆற்றல் வழங்கப்பட்டிருந்தால்)
6. பணத்தை பெறுவதற்கும் மற்றும் செலுத்தவதற்குமான நோக்கத்திற்காக ஸ்ரீலங்காவில் இல்லாத நபர்களது தத்துவக்காரராக
7. குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் கீழ் பொது நம்பிக்கையாளர் ஒரு ஆஸ்தியின் பொருத்தமான முகாமையாளராக கருதப்படுவார்
8. குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் கீழ் உயில் எழுதப்படாத ஆஸ்திக்கு ஒரு மேற்பார்வையாளராக
9. சிறையில் தண்டணை அனுபவிக்கும் நபரது ஆஸ்திகளுக்கு ஒரு பாதுகாவளர் நம்பிக்கையாளராக
10. பொது நம்பிக்கையாளர் எந்த ஒரு உயுருடன் உள்ள நபரின் கடைசி விருப்பு ஆவணத்தை பாதுகாப்பாக வைக்கும் நோக்கத்திற்காக பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.
11. பொது நம்பிக்கையாளர் கோவில் சொத்து சுவீகரிக்கப்பட்டதிற்கான நஷ்ட ஈட்டின் ஒரு நம்பிக்கையாளராக

## 12.4 பொதுநம்பிக்கை கட்டளைச்சட்ட திருத்தங்கள் மற்றும் எழுத்துமூல சட்டங்களின் கீழ் பொது நம்பிக்கையாளருக்கு வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகள்

ஏனைய எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் பொதுநம்பிக்கையாளர் கட்டளைச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளின் கீழ் பின்வரும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் பொது நம்பிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 1988ம் ஆண்டு சட்ட இலக்கத்தினால் திருத்தப்பட்ட பொது நம்பிக்கையாளர் கட்டளைச்சட்டத்தின் 10ஏ பிரிவின் கீழ் பொது நம்பிக்கையாளர் வெளிநாட்டில பணிபுரியும் ஒருவர் மரணித்தமைக்காக பெறப்பட்ட நஷ்டஈட்டை அவரது ஆதரவில் தங்கி உள்ளவர்கள் மற்றும் அல்லது உரிமையாளர்களுக்கு பங்கிட்டு வழங்கும் ஒரு அமைப்பாக செயல்படுவார். மேலும் ஸ்ரீ லங்காவை விட்டு வெளியில் தொழிலுக்காக செல்லும் ஸ்ரீலங்கா பிரஜைகள் பொது நம்பிக்கையாளருடன் அவர்கள் தொழிலில் இருக்கம்போது மரணிக்கும் சம்பவத்தில் நஷ்டஈடுகளை சிறந்தமுறையில் சீராக வழங்கும் நோக்கத்திற்காக பதிவு செய்துகொள்ளவேண்டும்.
- 1988ம் ஆண்டு சட்ட இலக்கம் 61ன் கீழ் பௌத்த ஆலயங்கள் தொடர்பான நஷ்டஈடு கொடுப்பனவு
- 1973ம் ஆண்டு எசோசியேட்டட் பத்திரிகை ஒப் சிலோன் லிமிட்டட் சட்ட இலக்கம் 28ன் கீழ் எசோசியேட்ட் பத்திரிகை ஒப் சிலோன் லிமிட்டட் வின் பங்குகள் அரசாங்கத்தின் நன்மைக்காக பொது நம்பிக்கையாளர் அதிகாரத்தில் விடப்படும்.

12.05 பொதுநம்பிக்கையாளரது சேவைகள்

பொது நம்பிக்கையாளர் நீதிமன்றத்தின் வழிநடத்துதலுடன் அல்லது தீர்மானத்துடன் அல்லது நிதியங்கள் மற்றும் இறுதி விருப்பு ஆவணங்களின் நோக்கங்களுக்கு அமைவாக பொதுமக்களுக்கு சேவை செய்வார்.

- கல்விகளில் நிதி கஷ்டங்களை எதிர்கொள்ளும் திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கு புலமைபரிசுகள் வழங்கல்
- அத்தியாவசிய மற்றும் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகள் மருத்துவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள்
- நிதியங்கள் மற்றம் அல்லது இரதவிருப்பு ஆவணம் எனபனவற்றின் நோக்கங்களின்படி சமயம் சார்ந்த இடங்களை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் விருத்தி செய்யவும் நிதி உதவி வழங்குதல்.
- தேவைப்படும் நபர்கள் மற்றும் அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குதல்
- சமய நடவடிக்கைகள் மற்றும் பலவித காரணங்களுக்காக உதவியை எதிர்பார்த்து உள்ள நபர்களுக்கு நன்கொடைகள் வழங்குதல்
- பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு அமைவாக பௌத்த உலகியல் சார்ந்த கட்டளைகள் சட்டத்தின் கீழ் நஷ்டஈடுகள் பங்கிடுதல்
- பண்ணை சொத்துக்கள் அல்லது நம்பிக்கை நிதி முகாமைத்துவம்
- கல்வியில் ஈடுபட்டுள்ள பண கஷ்டங்களுடன் உள்ள திறமையான சிறார்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தில் பெறப்பட்ட வருமானத்திலிருந்து புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- ஏசோசியேட்டட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட் டிலிருந்து இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் தலைவரை நியமித்தல்
- பிறநாட்டு நஷ்டஈடுகளை வழங்குதல்
- பௌத்த ஆலயங்களுக்கு நஷ்டஈட்டை பங்கிடுதல்
- தனிப்பட்ட நிதியங்களின் முகாமைத்தவத்திற்காக நிதிகளின் பணப்பரிமாற்றங்கள் கட்டணம் அறவிடப்படுகின்றது..(ரூபாய் 6,675,487.77 திறைசேரிக்கு பொது நம்பிக்கையாளரால் அறவிடப்பட்டு சட்டபூர்வமான பணமாக அனுப்பப்படுகின்றது.)

**2014.12.31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்**

| *விபரம்* | *ஒதுக்கம் (ரூபா)* | *செலவு (ரூபா)* |
|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | *36,488,000* | *36,404,604* |
| *மூலதன செலவினம்* | *1,917,000* | *1,722,836* |
| ***மொத்தம்*** | ***38,405,000*** | ***38,127,440*** |